
# யாழ்ப்பாணக் குடியேற்றம்



## இந்நூலாசிரியர் இயற்றிய பிற நூல்கள்

( IIம் பக்கத் தொடர் )

### தொகுப்பு நூல்கள்

1. ஆறுமுகநாவலர் கவித்திரட்டு
2. முருகேச பண்டிதர் கவித்திரட்டு
3. கந்தையாப் பண்டிதர் கவித்திரட்டு
4. முத்துக்குமார கவிராயர் கவித்திரட்டு
5. சி. வை. தாமோதரம்பிள்ளை கவித்திரட்டு
6. தோத்திர மஞ்சரி
7. முருகன் திருப்புகழ் மாலை
8. மரணத்தை வருவிக்கும் முப்பொருள்கள்
9. அம்பலவாணபிள்ளை நினைவுப் பாமாலை

### பதிப்பு நூல்கள்

1. தமிழ்ப்புலவர் சரித்திரம்
2. மாவைப் பதிகம்
3. ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம்
4. ஐயனார் ஊஞ்சல்

### இனி வெளிவரும் நூல்கள்

1. நூறாண்டு வாழ்வது எப்படி?
2. குமாரசுவாமிப்புலவர் கவித்திரட்டு
3. குமாரசுவாமிப்புலவர் கட்டுரைத் திரட்டு
4. தமிழ்ப்புலவர் கடிதங்கள் 100
5. ஆரியரும் தமிழரும்

கிடைக்கும் இடம் :

1. புலவரகம் மயிலணி, சுன்னாகம்

# யாழ்ப்பாணக் குடியேற்றம்

# யாழ்ப்பாணக் குடியேற்றம்

( ஆதிகாலம் தொடக்கம் ஒல்லாந்தர் காலம் முடியும்வரை )


★

முன்னைநாட் சென்னை லொயலாக் கல்லூரித்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
இளைப்பாறிய அராலி இந்துக்கல்லூரி
அதிபர்
**கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, B. A.**
இயற்றியது

★

வெளியிடுபவர்
**மு. குமாரசுவாமி**
புலவரகம்; மயிலணி; சுன்னுகம்
இலங்கை

# யாழ்ப்பாணம்



விளக்கம்
புகைவண்டிப் பாதை
பாலம்
பாக்கு நீரிணை
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
காங்கேசன்துறை
தொண்டைமானாறு
அல்வாய்
வல்லிபுரம்
கீரிமலை
மாதகல்
தெல்லிப்பழை
மல்லாகம்
சுன்னாகம்
புத்தூர்
சங்கானை
மூளாய்
மானிப்பாய்
வட்டுக்கோட்டை
கோப்பாய்
யாழ்ப்பாணம்
வங்காளவிரிகுடாக்கடல்
வரணி
அம்பன்
நாகர்கோவில்
கொடிகாமம்
சாவகச்சேரி
எழுதுமட்டுவாள்
செம்பியன்பற்று
பளை
காரைதீவு
ஊர்காவற்றுறை
எழுவைதீவு
வேலணை
அனலைதீவு
மண்டைதீவு
நயினாதீவு
புங்குடுதீவு
நெடுந்தீவு
பண்ணைக் கடல்
கேரதீவு
பூநகரிக்கடல்
ஆனையிறவு
பூநகரி
பரந்தன்
வடமாகாணம்
கிளிநொச்சி

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | V |
| | மேற்கோள் நூல்கள் | X |
| 1. | தோற்றம் | 1 |
| 2. | இயற்கை அமைப்பு | 2 |
| 3. | நாகர்கள் | 4 |
| 4. | லம்பகர்ணர் | 5 |
| 5. | வட இந்தியப் படையெடுப்புக்கள் | 6 |
| 6. | வியாபாரமும் குடியேற்றமும் | 8 |
| 7. | சேரநாட்டுக் குடியேற்றம் | 8 |
| 8. | மலையாளச் சாதிகளும் குடியேறிய இடங்களும் | 10 |
| 9. | மலையாள அரசு | 13 |
| 10. | மலபார் மொழியும் மக்களும் | 14 |
| 11. | தமிழர் குடியேற்றம் | 16 |
| 12. | A. தமிழ்நாட்டுச் சாதிகளும் குடியேறிய இடங்களும் | 18 |
| 12. | B. பிறநாட்டுக் குடியேற்றம் | 21 |
| 13. | தமிழர் ஆதிக்கம் | 22 |
| 14. | தமிழரசு | 23 |
| 15. | தமிழரசும் குடியேற்றக்காரரும் | 24 |
| 16. | வையாபாடல் | 25 |
| 17. | வையாபாடற் குடியேற்றம் | 30 |
| 18. | கைலாயமாலை | 35 |
| 19. | போத்துக்கேயர் காலம் | 36 |
| 20. | ஒல்லாந்தர் காலம் | 37 |

புலவரக வெளியீடு — 27
முதற்பதிப்பு—1982

விலை ரூபா : 10-00

கிடைக்குமிடம்
தனலக்குமி புத்தகசாலை
சுன்னாகம்

நூலாசிரியர் இயற்றிய பிற நூல்கள்

குமாரசுவாமிப்புலவர் வரலாறு
குமாரசுவாமிப்புலவர் நினைவுகள்
மகாத்மா காந்தி
சிவசம்புப்புலவர் சரித்திரம்
முருக தத்துவம்
மயிலணி அந்தாதி
காசியாற்றுப்படை
மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை
சந்திரசேகரப்பிள்ளையார் இரட்டைமணி மாலை
கண்ணகி வெண்பா
Kumaraswamy Pulavar Memoir (Eng.)

குகன் அச்சகம்
தெல்லிப்பழை

# முகவுரை

பரந்த அண்டகோளத்தின் அணுவளவாகிய யாழ்ப்பாணம் ஒரு சிறிய நாடாயிருந்தாலும் பண்டைப் பெருமை வாய்ந்த நாடாக விளங்குகின்றது. அது கல்தோன்றி மண் தோன்ருக் காலத்திற்குமுன் தோன்றிய ஆதி மனிதனின் பிறப்பிடமாகிய குமரிக் கண்டத்தின் ( *Lemuria* ) ஓர் பகுதியாக விளங்கிய பெருமையும் உடையது. சில ஆண்டுகளுக்கு முன் இந்து மாக்கடலை நுணுகி ஆராய்ந்த எழுபதுபேர் கொண்ட ரஷ்ய விஞ்ஞானக் குழுவின் தலைவராக விளங்கிய பேராசிரியர் பெஸ்றுகௌ ( *Bezrukov* ) வெளியிட்ட அறிக்கையும் (1) இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றது. ஆதிமனிதன் தமிழினத்தைச் சார்ந்தவன் என்று ஆராய்ச்சி வல்லுனராகிய சி. ஏச். மொனகான் (2) சேர். யோன் இவான்ஸ் (3), பேராசிரியர் பி. சுந்தரம்பிள்ளை (4) என்போர் கூறியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடியேற்றம் பழமையானது. அது சரித்திர காலத்துக்கு முற்பட்டது. இருள் சூழ்ந்த அந்தக் காலத்தைப் பற்றித் தெளிவான வரலாற்றுக்

---

1. The Daily Mail. 22-2-61
2. " The country submerged by the Indian ocean was the cradle of the human race and its language is Tamil" C. H. Monahan, C. C. M. Vol. XXI, p. 31.
3. " South India is the cradle of the human civilization" Sir John Evans, The Presidential address to the British Association.
4. " There is nothing strange in our regarding Tamilians as the remnants of a predeluvian race" Prof P. Sundaram Pillai.

21. யாழ்ப்பாண வைபவமாலை 39
22. யாழ்ப்பாண வைபவமாலையும் சரித்திராசிரியர்களும் 45
23. புதுச்சாதிகள் 48
24. சாதிமாறல் 52

## பிற்சேர்க்கை

1. முக்கிய நிகழ்ச்சிகளின் கால அட்டவணை 53
2. பூமிசாஸ்திரக் குறிப்புக்கள் 55
3. சாதிப் பட்டப்பெயர் 57
4. பெயரகராதி 58
5. பிழை திருத்தம் 64

## படங்கள்

1. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் அட்டை
2. யாழ்ப்பாணம் முகப்பு
3. கீரிமலை IX
4. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் 24:A
5. கீரிமலைத் தீர்த்தம் 24:B
6. தென்னிந்தியா 56:A
7. தமிழரசரின் நாணயங்கள் 56:B

எனது சாதியாராய்ச்சிக்குப் பலவகையிலும் உதவிய நண்பர்கள் பலருளர். அவர்களுள் முக்கியமானோர் சென்னைக் கிறிஸ்தவ கல்லூரி விரிவுரையாளர் திரு. க. இராசசேகரன், M. A. அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. மோ. கந்தசாமி முதலியார், B. A. அவர்கள், ஆறுமுகநாவலர் தருமபரிபாலகர் திரு. க. இராசேஸ்வரன், B. A. அவர்கள், கோளப்பஞ்சேரி அரங்கநாத முதலியார் அவர்கள், தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் மு. எத்திராசுலுநாயுடு அவர்கள், கோயம்புத்தூர் அரசாங்க நியாயவாதி திரு. *T. R.* சுந்தரம்பிள்ளை, B. A., B. L. அவர்கள், நெரூர் சிவசுப்பிரமணிய ஐயர், M. A. அவர்கள், திருச்சி அர்ச்சூசையப்பர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் திரு. சிவப்பிரகாசபிள்ளை அவர்கள், திருச்சி பிஷப்கீபர் உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஆர். பஞ்சநதப்பிள்ளை அவர்கள், சிறீவில்லிபுத்தூர் சென்னை அரசாங்கச் சம்பள விநியோகத்தர் திரு. வே. முத்துச்சாமிப்பிள்ளை, B. A. அவர்கள், மேற்படியூர் அரசாங்க எழுத்து வினைஞர் திரு. வ. சேதுராமலிங்க முதலியார், B. A. அவர்கள் முதலியோராவர். இவர்களுக்கு எனது நன்றி உரியதாகுக. மேலே கூறப்பட்டவர்கள் மூலம் பெற்ற விபரங்கள் அனைத்தும் இந்நூலாராய்ச்சிக்குப் பெரிதும் உதவின.

நேரே கண்டும், கேட்டும் அறிந்தவற்றைவிடத் தேஸ்டன், அ. கிருஷ்ணையர், ந. சி. கந்தையாபிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், சுவாமி வேதாசலம், பிலோ இருதயநாத் முதலியோர் சாதிகளைப் பற்றி எழுதிய நூல்களைப் படித்தறிந்த விஷயங்களும் இந்நூலை எழுதுவதற்கு உதவிபுரிந்தன.

குறிப்புக்கள் கிடைத்தல் அரிது. பாரதம், இராமாயணம், மகாவம்சம் முதலிய நூல்களிலும் தெளிவான வரலாற்றுக் குறிப்புக்கள் கூறப்படவில்லை. விஜயன் காலத்துக்குப் பின்னர் ஓரளவுக்குத் தெளிவான குறிப்புக்கள் கிடைக்கின்றன. வியாபார நோக்கத்தோடு சேர நாட்டினரும், இலங்கையைக் கைப்பற்றும் நோக்கத்தோடு தமிழ்ப் படைவீரரும் பிற்காலத்தில் வந்த காரணத்தால் யாழ்ப்பாணக் குடியேற்றம் முன்னேற்றம் அடைந்தது. இக் குடியேற்றத்தைத் திரித்து உண்மைக்கு முரண்பாடான கற்பனைக் கதைகளைச் சேர்த்து வையாபாடல் நூலாசிரியர் குடியேற்றத்தைப் பற்றிக் கூறியுள்ளார். கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல்களிற் கூறப்பட்ட குடியேற்றம் கர்ணபரம்பரையை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டமையாலும், உண்மைக்கு மாறான முரண்பாடுகள் நிறைந்திருத்தலாலும் உண்மைக் குடியேற்றம் என்று கூறமுடியாது

யாழ்ப்பாணக் குடியேற்றத்தைப் பற்றி முறையாக ஆராய்வதற்குத் தென்னிந்தியச் சாதிகளைப்பற்றி நன்கு அறிந்திருத்தல் அவசியம் வேண்டற்பாலது. யான் சென்னையிலும், திருச்சியிலும், தொண்டை, கொங்கு, சோழ, பாண்டி, சேர நாடுகளைச் சார்ந்த பல சாதி மாணவரோடு கூடக் கற்ற காலத்திலும், மேலே கூறப்பட்ட நாடுகளில் வசிக்கும் பல நண்பர்கள் வீடுகளில் விருந்தினனாகத் தங்கியிருந்த காலத்திலும், பற்பல சாதிகளைப்பற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. சென்னையிலிருந்தபோது அங்கிருந்து நாற்பது மைலுக்கப்பாலுள்ள காஞ்சீபுரத்துக்குக் கிராமங்களுக்கூடாகவும், பூந்தமலி, ஸ்ரீபெரும்பூதூர் முதலிய நகரங்களுக்கூடாகவும் கால் நடையாகச் சென்றபோதும், பதினைந்து மைலுக்கப்பாலுள்ள சேக்கிழாரின் பிறப்பிடமாகிய குன்றத்தூருக்குப் போனபோதும், தொண்டை மண்டல முதலி வேளாளரைப் பற்றியும், மறுசாதிகளைப் பற்றியும் மேலும் பல விபரங்களைப் பெறும் வாய்ப்புக் கிடைத்தது.

க. திருச்சிற்றம்பலம் அவர்கள், சண்டிருப்பாய் திரு. வே. சுவாமிநாதன் அவர்கள், வண்ணார்பண்ணை திரு. செ. முத்துத்தம்பி அவர்கள், இளைப்பாறிய ஆசிரியர் வட்டுக்கோட்டை திரு. *K.* வைரமுத்து அவர்கள், சுன்னாகம் பண்டிதர் திரு. கா. நமசிவாயம் அவர்கள், உடுப்பிட்டி திரு. ம. குமாரசூரியர் அவர்கள், கோப்பாய் திரு. வி. மயில்வாகனம், B. A. அவர்கள் முதலியோர். கையெழுத்துப் பிரதியை வாசித்துச் சிற்சில திருத்தஞ் செய்தவர்கள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. வை. க. சிவப்பிரகாசம், M. A. அவர்களும், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. *V.* கனகரத்தினம், B. A. (Hons) அவர்களுமாவர். யாழ்ப்பாணம், தென்னிந்தியா என்னும் இரு நாடுகளின் படங்களை அழகுற வரைந்து உதவியவர் கோண்டாவில் திரு. க. சண்முகநாதன் அவர்கள். இந்நூலை அழகாக அச்சிட்டு உதவியவர் குகன் அச்சக அதிபர் திரு. *S.* நவரத்தினமவர்கள். இவர்கள் எல்லோருக்கும் எனது மனமுவந்த நன்றி உரித்தாகுக.

மயிலணி
சுன்னாகம்
*1-9-82*

**கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை**

இந்நூல் ஆதிகாலந் தொடங்கி ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் முடியவுள்ள காலத்தில் நிகழ்ந்த குடியேற்றத்தைச் சுருக்கமாகக் கூறுகின்றது. இதற்கு முன் சரித்திராசிரியர்களால் ஆராயப்படாத சேரநாட்டுக் குடியேற்றமும், தமிழ்நாட்டுக் குடியேற்றமும் இந்நூலில் முக்கிய இடம்பெறுகின்றன. பிறமொழி பேசுபவர்கள் இங்கு இன்மையால் பிறமொழி பேசும் சாதிகளின் குடியேற்றத்திற்கு இந் நூலில் முக்கிய இடம் கொடுக்கப்படவில்லை.

இந்நூலிற் கூறப்படும் முடிபுகள் முடிந்த முடிபுகள் என்று கூறுவதற்கில்லை. விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் புதிய உண்மைகள் தோன்றப் பழைய ஆராய்ச்சி முடிபுகள் மாற்றமடைகின்றன. சிந்துவெளி அகழ்வினுற் பழைய சரித்திர ஆராய்ச்சி முடிபுகள் மாற்றமடைந்ததை யாவரும் அறிவர்.

இந்தப் பரந்த ஆராய்ச்சி நூலில் வழுக்கள் வாரா என்பது எமது கருத்தன்று. உண்மைக்கு மாருன வழுக்களைக் காணும் அறிஞர்கள் தக்க நியாயங்கள் காட்டி உண்மையை வெளிப்படுத்தல் அவர்கள் கடனுகும். அவர்கள் செய்யும் திருத்தம் எமக்கும் சித்திக்கும், பிறருக்கும் நன்மையை விளைவிக்கும், சரித்திர ஆராய்ச்சியையும் முன்னேறச் செய்யும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. [அப்பொருள்

இந்நூல் இனிது நிறைவேறப் பலவகையிலும் உதவிபுரிந்தவர் பலர் உளர். யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள தோம்புகளை ஆராய்தற்குத் துணை புரிந்தவர் வடமாகாண உப அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை அவர்கள். ஆராய்ச்சிக்கு வேண்டிய சில அரிய நூல்களைத் தந்துதவியவர்கள், சுன்னுகம் திரு.

18. திருமந்திரம், திருமூலர், கை. சி. சமாசப் பதிப்பு
19. தென்னாட்டுக் குடிகளும் குலங்களும், ந. சி. கந்தையாபிள்ளை, 1958
20. தென்னாடு, கா. அப்பாத்துரை, 1934
21. பத்துப்பாட்டு உ. வே. சாமிநாதையர் பதிப்பு
22. புறநானூறு உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1894
23. மணிமேகலை சீத்தலைச் சாத்தனார், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1921
24. மாபாள சூடாமணி, பாகவதன் அநதாரி
25. மேழி எழுபது, சொக்கநாதப் புலவர்
26. மேழி விளக்கம், சரவணையா, வெ. ரா. தெய்வ சிகாமணி, 1963
27. யாழ்ப்பாணச் சரித்திரம், ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, 1942
28. யாழ்ப்பாணச் சரித்திரம், செ. இராசநாயக முதலியார், 1933
29. யாழ்ப்பாணச் சரித்திரம், யோன், 3ம் பதிப்பு, 1930
30. யாழ்ப்பாண வைபவ கௌமுதி, க. வேலுப் பிள்ளை, 1918
31. யாழ்ப்பாண வைபவமாலை, மயில்வாகனப் புலவர்
32. யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனம், சுவாமி ஞானப்பிரகாசர், 1928
33. வரலாற்றுக்குமுன் வடக்கும், தெற்கும், அ. மு. பரமசிவாநந்தம், M. A., 1928.
34. வெடியரசன் சரித்திரம்
35. வேளாளர் புராணம், கந்தசாமிக் கவிராயர், 1908
36. வையாபாடல், வையாபுரிஐயர், J. W. அருட் பிரகாசம், 1921

# மேற்கோள் நூல்கள்

## 1. தமிழ் நூல்கள்

1. இந்துசாதனம், 18-7-49
2. இலங்கைச் சரித்திரம், 3-ம் பதிப்பு, யோன், 1929
3. இலக்கியச் சொல்லகராதி, 1915, அ. குமாரசுவாமிப்புலவர்
4. ஈழகேசரி, 17-7-49
5. ஏரெழுபது, கம்பர், 4ம் பதிப்பு, 1912, நாவலர்
6. கலித்தொகை, 1887, சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பு
7. காணிநூல், கம்பநாதர்
8. கைலாயமாலை, முத்துராசர், த. கைலாசபிள்ளை பதிப்பு, 1929
9. கொங்குநாட்டு மலைவாசிகள், பிலோ இருதயநாத், 1966
10. சிலப்பதிகாரம் இளங்கோவடிகள், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, 1892
11. சூடாமணி நிகண்டு, மண்டலபுருடர், நாவலர் பதிப்பு, 1900
12. செகராசசேகரமாலை, சோமையர்
13. தண்டிகைக் கனகராயன் பள்ளு முகவுரை வ. குமாரசுவாமி, B. A. 1963
14. தமிழ்மொழி இலக்கிய வரலாறு, மா. இராசமாணிக்கனார், 1963.
15. தமிழ் வரலாறு, ரா. இராகவஐயங்கார், 1941
16. திருக்கோயிற் கல்வெட்டுக்கள், வி. ரா. குருசாமிதேசிகர், 1957
17. திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, 1933

19. *History of Pre-muslim India, T. Rangachary*
20. *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society*
21. *Lost Lemuria, Elliot Scott*
22. *Mahavamsa (Wilhelm Geiger)*
23. *Malabar and its Folk, T. K. Gopal Panikkar, 3rd Edn,* 1900
24. *Malayalam Dictionary, Gundert*
25. *Memoir of Hendric Zwardecroon, Tran. Sophia*
26. *Memoir of Thomas Van Rhee, Trans, R. A. Vanlangenberg*
27. *Poojavali*
28 *South India and Ceylon, K. K. Pillai*
29. *Tamil India, M. S. Pooranalingam Pillai,* 1927
30. *Tamils and Ceylon,* 1958, *C. S. Navaratnam*
31. *Tamils and Early Cevlon, Dr. Sivaratnam*
32. *Tamils* 1800 *years ago, V. Kanagasabai*
33. *Tombo, Ceylon Government Publication*
34. *Traditions and Legends of Nagarkovil, M. D. Ragavan*
35. *Vedic Age, B. C. Muzumdar.*
36. *Vedic India, V. Rangachary*

## 2. வடமொழி நூல்கள்

1. இருக்கு வேதம்
2. சாம வேதம்
3. கௌடில்ய அர்த்த சாஸ்திரம்
4. வாயு சங்கிதை
5. வால்மீகி இராமாயணம்

## 3. ஆங்கில நூல்கள்

1. *Annual Report of the Inspector General of Police for* 1897, *(Madras)*
2. *A Monograph of Mannar, A. S. Boake*
3. *A Short History of Hinduism in Ceylon,* 1968, *C. S. Navaratnam*
4. *Cambridge History of India, E. J. Rapson*
5. *Castes and Tribes of South India, Thurston*
6. *Castes and Tribes of Travancore, A. KrishnaIyer*
7. *Ceylon Census Report,* 1901. *Sir. P. Arunachalam*
8. *Ceylon Gezetter, Simon Casie Chetty*
9. *Ceylon Historical Journal*
10. *Ceylon National Review*
11. *Ceylon Under Western Rule, L. H. Horace Perera,* 1955
12. *Desavalame, Trans. by A. F. Muthukrishna*
13. *Dravida, E. L. Tambimuthu,* 1945
14. *Early History of India, Vincent Smith*
15. *Ethnological Survey of Ceylon, M. D. Ragavan*
16. *History of Ceylon, H. W. Codrington*
17. *History of Creation, Prof. Haeckel*
18. *History of South India, A. Neelakanda Sastri*


# யாழ்ப்பாணக் குடியேற்றம்

## 1. தோற்றம்

இவ்வளவென்று அளக்கமுடியாத பல்லாண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவும் இலங்கைத்தீவும் இப்போது இந்து சமுத்திரத்தில் அமிழ்ந்திக்கிடக்கும் பெருநிலப்பரப்பாகிய 'லெமூரியா' என்னும் கண்டத்தின் பகுதிகளாக விளங்கின என்று நிலநூல் வல்லாரும் (1), கடல்நூல் வல்லாருங் (2) கூறுவர். இக் கண்டம் சம்புத்தீவு (3), நாவலந்தீவு (4), குமரிக் கண்டம் (5) என்னும் பெயர்களால் தமிழிலக்கியங்களில் வழங்கப்பட்டது. ஏறக்குறையப் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட கடல் கோளினால் குமரிக்கண்டம் கடலில் அமிழ்ந்திப்போகத் தென்னிந்தியாவும், இலங்கைத்தீவும் வெவ்வேறு நாடுகளாகப் பிரிந்தன. பிற்காலத்தில் ஏற்பட்ட கடல்கோளினால் இலங்கைத்தீவின் வடபாகத்தில் ஒரு பெருந்தீவு உண்டானது. பழந்தமிழ் நூல்களில் அது நாகதீபம் என்னும் பெயரால் வழங்கப்பட்டது. கி. மு. 205க்கும் கி. மு. 161க்கும் இடையில் ஏற்பட்ட கடல் கோளினால் நாகதீபத்தின் பெரும்பகுதி கடலில் மூழ்கிப்போக எஞ்சி இருந்தது இப்போதுள்ள யாழ்ப்பாணமும் அதன் மேற்குப் பக்கத்திலுள்ள தீவுகளுமா

---

1. Elliot Scott, Lost Lemuria.
2. Prof. Haeckel, History of Creation, Vol I, p. 361; Vol II. p. 325—6.
3. "சம்புத்தீவின் தமிழக மருங்கின்," மணிமேகலை. 22, 63.
4. "நாவலந்தீவில் வாழ்வர்" அப்பர் தேவாரம், 6, பக். 62.
5. 'இம்மாபெரும் நிலப்பரப்பைத் தமிழ் மரபு 'குமரிக்கண்டம், என்று வழங்குகிறது.' கா. அப்பாத்துரை, தென்னாடு, பக். 7.



கீரிமலை

கும். இக் கடல்கோளைப் பற்றிச் சிலப்பதிகாரம் (1), கலித்தொகை (2) என்னும் சங்க நூல்களிலும், புத்த சரித்திர நூலாகிய இராசாவளியிலும் (3) கூறப்பட்டுள்ளது.

## 2. இயற்கை அமைப்பு

யாழ்ப்பாணம் இந்தியாவின் தென்கிழக்கே முப்பத்தாறு மைல் தூரத்திலுள்ள இலங்கைத்தீவின் வடகோடியிலுள்ள ஓர் குடா நாடாகும். அது வடக்கிலும் மேற்கிலும் பாக்குநீரிணையையும், கிழக்கில் வங்காள விரிகுடாக் கடலையும், தெற்கே பூநகரிக் கடலையும் எல்லையாகவுள்ளது.

அதன் மேற்குப் பக்கத்தில் மண்டைதீவு, வேலணை, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு முதலிய தீவுகள் உள்ளன. அது ஐம்பத்தைந்து மைல் நீளமும், பதினான்கு மைல் அகலமும் உள்ளது. அதன் குடிசனத்தொகை 739472 (1981)

அது கடல் மட்டத்துக்கு மேற் சராசரி ஒன்பதடி உயரமுள்ளது. ஆகக்கூடிய உயரமுள்ள இடம் கீரிமலையாகும். அதன் உயரம் நாற்பதடி. அம்மலையில் நகுல முனிவர் வசித்தபடியால் அது நகுலமலை (4) என்னும் பெயரைப் பெற்றது. அம்மலைக்கருகிலுள்ள கோயிலும், தீர்த்தமும் அம்முனிவர் பெயரால் வழங்கப்

1. 'குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள,' சிலப். காடுகாண், 18—24.
2. "மலிகடல் வளர்ந்து மண்கடல் வெளவலின்", கலித்தொகை, 104, 1—4.
3. இராசாவளி, பக். 188.
4. "நாகுலம் நாம சம்சுத்த ம அஸ்தி ஸ்தானம் மஹிதலே" சூதசங்கிதை. நாகுலம் — நகுலம் — கீரி.

பட்டு வருகின்றன. அத்தீர்த்தத்தின் பெருமையை அறிந்த மகான்கள் பலர் அங்கு வந்து தீர்த்தமாடிப் போனதாகப் புராணங்கள் கூறுகின்றன. பாப்பாண்டவரின் பிரதிநிதியாகக் கி. பி. 1343 இல் இலங்கைக்கு வந்த யோன் டி. மரிக்னொலியும் (1) கீரிமலைத் தீர்த்தத்தின் மகிமையை எடுத்துக் கூறியுள்ளார்.

தொண்டைமாஞறு என்று கூறப்படும் உப்பாறு யாழ்ப்பாணத்தை இரண்டாகப் பிரிக்கிறது.

யாழ்ப்பாணம் கடலாற் சூழப்பட்டிருத்தலால் அது மட்டான சூடும், குளிரும் உடையது. கோடை காலத்தில் சூடு 101Fக்கு மேற்படாமலும் மாரிகாலத்தில் குளிர் 81Fக்கு கீழ்ப்படாமலும் உள்ளது.

சோழநாட்டிலிருந்து வந்த பாணன் ஒருவன் ஜயதுங்கவராசன் முன்னிலையில் யாழை வாசித்து மகிழ்வித்தபோது மணற்றியின் (யாழ்ப்பாணத்தின்) தென்மேற்குப் பாகத்தைப் பரிசாகப் பெற்றுன். அவனும், அவனுடைய சுற்றத்தவர்களும் குடியேறிய இடத்திற்கு யாழ்ப்பாணம் என்னும் பெயர் வைக்கப்பட்டது. பிற்காலத்தில் அப்பெயர் குடாநாடு முழுவதுக்கும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணம் என்னும் பெயர் வழக்கில் வருமுன் அது மணற்றி (2), மணிபல்லவம் (3), மணற்றிடல் (4) என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது.

---

1. John de Marignolli; 'There is a perennial spring at the foot of the mountain.'
2. 'மாங்கையொடு மணற்றி கொண்ட வல்விசயன்.' சாதிமாலை.
3. 'வடகடற் கரையில் மேவிய மணற்றிடல் நாட்டில்', வையா பாடல், பா. 12.
4. 'வாங்கு திரையுடுத்த மணிபல் லவத்திடை', மணிமேகலை, 8, வரி, 2.

## 3. நாகர்கள்

இலங்கையின் ஆதிவாசிகளாகிய நாகர்கள் அத் தீவின் வடபகுதியிலும் மேற்கிலும் வசித்தனர். அவர் வசித்த இடம் நாகதீவம் என்று அழைக்கப்படும். நாகதீவம் நாக அரசர்களால் ஆளப்பட்டது. சிங்கள சரித்திர நூலாகிய மகாவம்சம் கி. மு 6ம் நூற்றுண்டில் நாகதீவம் மகோதரன் என்னும் அரசனுல் ஆளப்பட்டது என்று கூறுகின்றது (1). நாகர்கள் மலையாளத்திலிருந்து இங்குவந்து குடியேறிய நாயர்கள் என்று நீலகண்ட சாஸ்திரியார், உவூட்கொக் (*Woodcock*), பாக்கர் (*Parker*) முதலியோர் கருதுகின்றனர். அது பொருந்தாது. நாகர்கள் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திற் குடியேறிய நாயர்களோடு கலந்து கொண்டனர் என்று கருதுதல் பொருந்தும். நாகர்கள் திராவிடரைச் சார்ந்தவர்கள் என்பது வி. ரங்காச்சாரியர் கருத்தாகும் (2). பி. சி. முசம்தாரும் (3), ஆ. கனகசபைப்பிள்ளையும் (4) நாகர்கள் இமயமலைக்கப்பாலிருந்து வந்து இந்தியாவுக்குள் குடியேறினர் என்று கூறும் கொள்கைக்கூற்று ஏற்புடையதன்று. பழக்கவழக்கங்களில் நாகர்கள் தமிழரை ஒத்திருத்தலாலும், அவர்களுட் சிலர் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராக விளங்கினமையாலும் நாகர்கள் தமிழினத்தைத் சார்ந்தவர்கள் என்று பலர் கருதுகின்றனர்.

முற்காலத்தில் நாகர்கள் இந்தியா முழுவதிலும் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்தனர் (5). ஆரியர்கள்

---

1. 'A kingdom existed in Nagadeebam" Mahavamsa, Chap. I, p. 46—47.
2. V. Rangachariar, Vedic India, p. 538.
3. B. C. Muzumdar, Vedic Age, Vol 3, p. 55.
4. A. Kanagasabaippillai, Tamils 1800 years ago.
5. "Nagas ruled the whole of India down to the 6 th Century B, C.
   V. Rangachariar; Vedic India, p. 536.

இந்தியாவுக்குள் கி. மு. 1500 இல் நுழைந்தபோது நாகரோடு கடும்போர் புரிந்து அவர்களை வென்று தெற்குப் பக்கமாகப் பின்வாங்கச் செய்தனர் அவர்கள் பிற்காலத்தில் வலியற்று நாகதீபத்தில் வசித்தனர். கடைசியாக ஏற்பட்ட கடல்கோளினால் அவர்கள் நாடும், செல்வாக்கும், மக்கள் தொகையும் குறைந்தன. இந்நிலையில் அவர்கள் கடற்கொள்ளையில் ஈடுபட்டு வாழ்க்கையை நடத்தினர். கடற்கொள்ளையினால் வியாபாரம் தடைபடுவதை உத்தேசித்துச் சேரமன்னன் அவர்களைத் தண்டித்து அடக்கினான். நாகர்கள் வீழ்ச்சி அடைந்த பின்னர் லம்பகர்ணர் என்னும் சாதியார் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெற்றனர்.

## 4. லம்பகர்ணர்

'விஜயன் பிறக்குமுன் இலங்கை ஒரு சிறந்த குடியேற்ற நாடாக விளங்கியது' என்று போல் பீறிஸ் கூறியுள்ளார் (1). "இந்தியா கிட்ட இருப்பதாலும் வாடைக் காற்றுக் காலத்திலும், சோழகக்காற்றுக் காலத்திலும் கடற்பிரயாணஞ் செய்யக்கூடிய வசதி இருத்தலாலும் அங்கிருந்து மக்கள் வந்து குடியேறியிருக்க வேண்டும்." என்று *W. A. S.* போக் என்பவர் கூறியுள்ளார் (2). இதே கருத்தை சேர். உவில்லியம் யோன்ஸ் (3), லூயிஸ் நெல், *C. S.* நவரத்தி

1. Dr. Paul Pieris "I suggest that Ceylon was a flourishing colony long before Vijaya was born"; Journal of the Royal Asiatic Society of Ceylon.
2. W. A. S. Boake; A Monograph of Mannar; " The colonization must have taken place at an early date. I think Ceylon was colonized from India ".
3. Sir William Jones, 'Ceylon National Review" 'The island time out of memory was colonized by a Hindu race'.

னம் (1) என்போரும் வெளியிட்டிருக்கின்றனர். விஜயன் நகுலேஸ்வர ஆலயத்தைப் புதுப்பித்தான் என்று கூறப்பட்டிருத்தலாலும், திருமூலர் இலங்கையைச் சிவபூமி என்று கூறியிருத்தலாலும் (2) மிகப்பழைய காலத்தில் தமிழர்கள் இங்கே குடியேறினர் என்று கருத இடமுண்டு. அப்படியானல் அவர்கள் யார்? என்ற கேள்வி எழுகின்றது. அவர்கள் தென்னிந்திய கீழைக்கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய கள்ளர் என்னும் சாதியார் என்று கூறலாம். கள்ளருடைய காதுகள் பாரமான காதணிகளுடன் தூங்கியிருப்பதைக்கண்ட சிங்களவர் பரிகாசமாக அவர்களை லம்பகர்னர் என்று அழைத்தனர். லம்பம் — தூங்குகின்ற, கர்னர் — காதுடையவர் என்பது அதன் பொருள் (3). கள்ளர் மறவரைச் சார்ந்த 'சாதியார். அவர்கள் கொள்ளை, கொலை, களவு முதலிய மறத்தொழிலைச் செய்யும் இயல்புடையவர். போர் புரிதலிலும் வல்லவர்கள் என்று 'சேர் வால்ரர் எலியெற்' கூறியுள்ளார் (4). அவர்கள் இலங்கையின் வடபகுதியை 200 வருடங்கள் ஆட்சி செய்தனர்.

## 5. வடஇந்தியப் படையெடுப்புக்கள்

ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்தபோது (கி. மு. 1500) அவர்களை எதிர்த்துப் போர் புரிந்த நாகர்களையும், இயக்கர்களையும், திராவிடர்களையும் அவர்

---

1. C. S. Navaratnam, A Short History of Hinduism in Ceylon, p. 167. " The Tamils who live in close proximity to the Northern coast mast have had close connection wtth the island. "
2. திருமந்திரம், பா. 2747.
3. " The ears of the Kallars are bored and heavy earings hung, Castes and Tribes of South India. " Thurston.
4. Sir Walter Elliot. " They (Kallars) are bold, indomitable and martial".

களை முறையே பாம்புகள் என்றும், பேய்கள் என்றும், அசுரர் என்றும் இழிவாகக் கூறினர். தமது பகைவர்களைக் கொல்லுமாறு இந்திரன், அக்கினி முதலிய தெய்வங்களை வேண்டினர் என்பது இருக்கு, சாமம் முதலிய வேதங்களால் அறியலாம் (1). திராவிடர் ஒருபோதும் அசுரராகார் என்பது ரா. இராகவையங்காரது உறுதியான கருத்தாகும் (2). திராவிடர்களைத் தாசர் என்று கூறுவதும் பொருந்தாது என்பது பேராசிரியர் ரப்சன் கருத்தாகும் (3). தென்னாட்டில் வசிக்கும் பகைவர்களை அழிப்பதற்கு அவர்கள் ஐந்து படையெடுப்புக்களில் ஈடுபட்டனர் (4).

அவை, கந்தன் தலைமையில் ஒரு தெய்வீகப் படையெடுப்பு, அகத்தியர் தலைமையில் ஒரு முனிவர் படையெடுப்பு (5), இராமன் தலைமையில் ஓர் அரசர் படையெடுப்பு, புத்தன் தலைமையில் ஓர் ஆத்மீகப் படையெடுப்பு (6), விஜயன் தலைமையில் ஓர் மக்கட் படையெடுப்பு என்பன. இப்படையெடுப்புக்களால் அதிகம் குடியேற்றம் நடைபெறவில்லை. ;அகத்தியரோடுவந்த பிராமணர் தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் குடியேறினர்.

---

1. இருக்குவேதம், IV, 43;. சாமவேதம், VI, 6.
2. ரா. இராகவ ஐயங்கார், தமிழ் வரலாறு, பக். 31.
3. Prof. E. T. Rapson, 'Cambridge History of India', vol. v. p. 84. 'The term Dasus as the aboriginees were repeatedly called is applied indifferently to the human enemies of the Arians.'
4. Sir P. Arunachalam, Census of Ceylon for 1901, p. 185.
5. 'அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இயங்காமற் செய்தார்' தொல்காப்பியம், பாயிரம், நச்சினார்க்கினியர் உரை, திருமகள் அச்சகப்பதிப்பு, பக். 11.
6. "Buddha went to Ceylon to purify her faith" Mahavamsa, chap. 1 . 17.

## 6. வியாபாரமும் குடியேற்றமும்

மேலே கூறப்பட்ட படையெடுப்புக்களினுல் இராக்கதபயம் ஓரளவு நீங்கியது. சகலதேச மக்களும் வியாபார நோக்கத்தோடு இங்கு வரத்தொடங்கினர். இங்குள்ள துறைமுகங்களும் முக்கியத்துவம் அடைந்தன. 'உறற்ருேற்ரு' (ஊர்காவற்றுறை), சம்புகோவளம் என்னும் இரண்டும் பிறநாட்டுக் கப்பல்கள் ஏற்றுமதி செய்யும் துறைமுகங்களாயின. ஊர்காவற்றுறை கலிங்கமாகனுல் அரண் செய்யப்பட்ட துறைமுகமாக விளங்கினதென்பது பூசாவளி என்னும் நூலினுல் அறியக்கிடக்கிறது (1). வட இந்திய வியாபாரிகள் இங்குவந்து வியாபாரஞ் செய்ததாகச் சாதகங்கள் கூறுகின்றன (2). கந்தரோடையில் எடுக்கப்பட்ட 35 நாணயங்களும், வல்லிபுரத்தில் எடுக்கப்பட்ட 2 நாணயங்களும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றன. சேரநாட்டு வியாபாரிகள் பாலக்காடு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, திருச்சி, பட்டுக்கோட்டை, புகார் முதலிய இடங்களுக்கூடாக உள்ள வியாபாரப்பாதை வழியாக வந்து தென்னிலங்கையிலிருந்து பொதிமாடுகள் மூலம் கொண்டுவரப்பட்ட வியாபாரப் பொருள்களை வாங்கிச் சென்றதனுல் சேரநாட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பு சேரநாட்டினர் இங்கு வந்து குடியேறச் சாதகமாக இருந்தது.

## 7. சேரநாட்டுக் குடியேற்றம்

முதலில் யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்கள் சேரநாட்டினராகிய மலையாளிகள் என்பது நீலகண்ட சாஸ்திரியார் கருத்து (3). கிறீஸ்த சகாப்தத்திற்கு

---

1. p 239.
2. Vokhahama Jathaka; Trans. by W. H. Reuse, vol. II, No. 196 (1895).
3. A. Neelakanda Sastry; History of South India.

முன் மலையாளிகள் இங்கு வந்து குடியேறினர் என்னும் பாரம்பரியக் கூற்றுத் தமிழ்மக்களுள் இருந்து வருகிறதாகச் சேர். எமேசன் றெனென்ற் (Sir Emerson Tennent) கூறுகிறார். மலையாளத்திலிருந்து நாடுகடத்தப்பட்டவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள் என்று லிபிறேஸ் (Libeyros) என்னும் சரித்திராசிரியர் கூறுகிறார் (1). மலையாளத்திற் பரசுராமராற் குடியேற்றப்பட்ட நம்பூதிரிப் பிராமணர்கள் மலையாளிகளை நாட்டைவிட்டு வெளியேற்றினர் என்று மலையாள சரித்திர நூலாகிய கேரளோற்பத்தி என்னும் நூல் கூறுகின்றது. இதே கருத்தைப் பேராசிரியர் வி. ரங்காசாரியரும் கூறியிருக்கிறார் (2). நாட்டை விட்டு வெளியேறிய மலையாளிகளுட் சிலர் இருபது மைல் அகலமுள்ள பாலைக்காட்டுக் கணவாய்க்குள்ளால் வந்து வியாபாரப்பாதை வழியாகச் சென்று யாழ்ப்பாணம் வந்து குடியேறினர். சிலர் அதே கணவாயாற் சென்று கொல்லிமலை, பச்சைமலை, சவ்வாது மலைகளில் மறைமுகமாகக் குடியேறி வாழ்கின்றனர். வேறு சிலர் கடல்மார்க்கமாகக் கன்னியாகுமரி, காயல்பட்டினம், இராமேஸ்வரம், மாந்தை வழியாக வந்து யாழ்ப்பாணத்திலும், தென்னிலங்கையிலும் குடியேறினர்.

மலையாளநாடு களப்பிரர் (கி. பி. 3—9), சாளுக்கியர் (கி. பி. 6), பாண்டியர், மகமதியர் (கி. பி. 1768 — 1793), விக்கிரமாதித்தன் முதலிய வேற்றரசர் ஆளுகைக்குட்பட்ட போதும், மலையாளிகள் நாட்டைவிட்டு வெளியேறினர். சிங்கள அரசர் வைத்திருந்த மலையாளக் கூலிப்படையைச் சேர்ந்த பலர் சம்பளம் ஒழுங்காகக் கொடுபடாமையாலும், வேறு காரணங்களாலும் படையைவிட்டு விலகி யாழ்ப்பாணம் வந்து குடியேறினர். அநேக மலையாளிகள் இங்கு

1. Libeyros, History of Ceylon.
2. T. Rangachary, History of Pre-Muslim India, Vol. II, p 542.

வந்து குடியேறினர் என்பதை M. D. இராகவன் தமது நாகர்கோயில் வரலாற்றுய்வில் விளக்கியுள்ளார் (1). மலையாளத்தில் வேலைவாய்ப்பின்மையும் மலையாளக் குடியேற்றத்திற்குக் காரணமாகும்.

மலையாளத்திலுள்ள முக்கிய சாதிகள் இருபத்தேழுள் பதினான்கு சாதிகள் யாழ்ப்பாணத்திற் குடியேறியிருக்கின்றன என்பது போத்துக்கேயர் எழுதிவைத்த தோம்புகளால் அறியக் கிடக்கின்றது (2). தோம்புகளின் அடிப்படையில் இங்குவந்து குடியேறிய சகல மக்களுள் மலையாளத்தவர்கள் 48% குடியேறியுள்ளார்கள் என்று ஊகிக்கலாம். மலையாளிகள் வந்து குடியேறிய இடங்களுக்குத் தங்கள் பெயரையோ, தங்கள் சாதிப் பெயரையோ, தங்கள் ஊரின் பெயரையோ, தங்கள் நாட்டின் பெயரையோ, அல்லது அரசன் பெயரையோ ஏதாவதொன்றை வைத்துள்ளனர்.

## 8. (A) மலையாளச் சாதிகளும் குடியேறிய இடங்களும்

*(1)* குறும்பர் - குறும்பாவத்தை (சுதுமலை), குரும்பசிட்டி (ஏழாலை). *(2)* முக்குவன் - முக்குவிச்சி ஒல்லை (இணுவில்). *(3)* நாயர் - பத்திநாயன் வயல் (மல்லாகம்). *(4)* புலையன் - மூப்பன்புலம் (ஏழாலை). *(5)* மலையன் - மலையன்சீமா (சிறுப்பிட்டி). *(6)* பணிக்கன் - பணிக்கன் சாட்டி (வேலணை). *(7)* தீயன்-தீயா

1. M. D. Ragavan, Traditions and Legends of Nagar Kovil. Spolio Zeylanica, Vol. 27, Part I, p. 953.
2. தோம்பு என்பது ஊர்களிலுள்ள காணிகளின் பெயரும், பரப்பும், உடையவன் பெயரும், சாதியும், அரசிறை வரியும், கடமைகளும், ஊழியமும் குறிக்கப்பட்ட ஏட்டின் பெயராகும். இது கி. பி. 1623 இல் எழுதப்பட்டது.

வத்தை (கோப்பாய்). (8) பட்டன் - பட்டன் வளவு (வரணி). (9) வாரியார் - வாரிக்காவற்கட்டு (புங்குடு தீவு). (10) வேடுவன் - வேடுவன் கண்டி (மூளாய், நுவாலி). (11) பாணன் - மாப்பாணன் கலட்டி (கச்சாய்). (12) பிராமணன் - பிராமணன் வயல் (நாவற்குழி). (13) வேளான் - வேளான் பொக்கட்டி (கச்சாய்). (14) நம்பி-நம்பிராயன் தோட்டம் (சுதுமலை).

## B. மலையாளம் என்னும் பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

(1) மலையாளன் காடு - அராலி, கோப்பாய். (2) மலையாளன் சீமா - அச்சுவேலி, நீர்வேலி. (3) மலையாளன் ஒல்லை-உடுவில். (4) மலையாளன் பிட்டி - களபூமி. (5) மலையாளன் தோட்டம் - சங்கானை, சுழிபுரம், சுதுமலை. (6) மலையாளன் வளவு - அத்தியடி, அச்செழு. (7) மலையாளன் புரியல் - களபூமி,

## C. சேரன் என்னும் பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

(1) சேரன் - சேரதீபம் [இலங்கை]. (2) சேரன் கலட்டி - வரணி. (3) சேரன்எழு - நவுண்டில். (4) சேரன்தம்பை - தனக்காரக்குறிச்சி. (5) சேரபாவன் சீமா - மாவிட்டபுரம், நவிண்டில். (6) வில்லவன் தோட்டம் - சங்கானை, சில்லாலை.

1. வேளான்-திருவாங்கூரில் பறையர் 'வேளான்' என்று அழைக்கப்படுவர். தென்னிந்திய குலங்களும், குடிகளும் பக். 116.
2. சீமா - எல்லை, மலையாள அகராதி, Gundert.
3. வில்லவன் - சேரன், இலக்கியச் சொல்லகராதி.

## D. சிறிய மாற்றத்தோடு கூடிய சேரநாட்டுப் பெயர்கள்

(1) கோட்டையம் - கோட்டைக்காடு. (2) சாத்தகிரி - சாத்தான் ஒல்லை [சுழிபுரம்]. (3) பட்டாம்பி - பட்டாவளை [கொக்குவில்]. (4) புன்னாடு - புன்னாலை. (5) முள்ளூர் - முள்ளானை [விளான்], முள்ளியான் [பச்சிலைப்பள்ளி] (6) வைக்கம் - வைக்கறப்பளை [புலோலி]. (7) பைபோலை - பையோலை [கட்டுவன்]. (8) மருதூர் - மருதம்பத்தை. (9) மல்லியம் - மல்லியோன் [வல்லுவெட்டித்துறை]. (10) மாயனூர் - மாயனை. (11) மாரி - மாரியவளை [தெல்லிப்பழை]. 12) மீசலூர்-மீசாலை. (13) எடக்காட்-இடைக்காடு. (14) கச்சினவளை - கச்சினவடலி [சுன்னாகம்]. (15) கள்ளிக்கோடு - கள்ளியங்காடு. (16) குட்டுவன் - கட்டுவன், குட்டன் வளவு [இயற்றாலை, தொல்புரம்]. (17) உரிகாட்-ஊரிக்காடு. (18) குலபாளையம்-குலனை [அராலி]. (19) கொத்தலா - கொத்தியவத்தை [சுன்னாகம்]. (20) அலைப்பை - மலைப்பை. (21) ஒட்டபாலம் - ஒட்டகப்புலம். (22) ஒல்லூர் - ஒல்லை. (23) களநாடு - களபூமி, களனை, [சங்கானை, புத்தூர், புலோலி, மாகியப்பிட்டி].

## E. யாழ்ப்பாணத்தில் வழங்கும் சேரநாட்டு ஊர்ப்பெயர்கள்

(1) அச்செழு, (2) இடைக்காடு, (3) கரம்பன், (4) கிழாலி, (5) குதிரைமலை, (6) கொல்லம், (7) நாகர்கோயில், (8) கோவளம், (9) மாந்தை, (10) பாலைக்காடு முதலியன.

## F. மலையாளத்திலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கும் பொதுச் சொற்கள்

(1) துரும்பு, (2) வண்ணான், (3) பணம், (4) தம்பி, (5) அப்பச்சி, (6) பறைதல், (7) குட்டி முதலியன.

## G. யாழ்ப்பாணத்திற் காணப்படும் மலையாள வழக்கங்கள்

(1) பெண் வழிச் சொத்துரிமை, (2) பெண் வீட்டில் மாப்பிள்ளை வசித்தல், (3) பெண்கள் மார்புக்குக் குறுக்கே சேலையைக் கட்டுதல், (4) பெண்கள் காதோட்டையை ஓலைச்சுருள் வைத்துப் பெருப்பித்தல், (5) பெண்கள் மாதத்துடக்குக் காலத்தில் வண்ணானுடைய மாற்றுடை அணிதல், (6) சம்மந்தக் கலியாணம், (7) கட்டுக் கலியாணம், (8) குருவில்லாக் கலியாணம், (9) ஆண்கள் வேட்டி கட்டும் முறை, (10) ஆண்கள் கன்னைக்குடுமி முடிதல், (11) கஞ்சி வடித்துச் சோறு சமைத்தல், (12) நாற்சார் வீடு கட்டுதல், (13) சங்கடம் படலை அமைத்தல், (14) வீட்டைச்சுற்றி வேலி அடைத்தல், (15) ஒழுங்கை அமைத்தல் முதலியன.

## 9. மலையாள அரசு

மலையாளக் குடியேற்றத்தின் முன்னோடிகளாக விளங்கிய முக்குவர்கள் நெடுந்தீவு, ஆனைக்கோட்டை, வட்டுக்கோட்டை, பொன்னாலை, கீரிமலை, மயிலிட்டி முதலிய இடங்களிற் குடியேறித் தமது திறமையாலும், விடாமுயற்சியாலும் முன்னேறி நெடுந்தீவில்

---

1. யாழ் - வை - மாலை, பக். 10.

வெடியரசன் தலைமையில் ஒரு அரசியற் பீடத்தை அமைத்தனர். வெடியரசன் குறுகிய காலத்திற்குள் தரைப்படை, கடற்படை முதலிய படைகளுடன் சிறந்த அரசனாக விளங்கினான். சோழ அரசன் அவன் வலிமையைக் கண்டு பொறாமை அடைந்து அவனை அடக்கக் கருதி மீகாமன் தலைமையில் ஓர் கடற் படையை அனுப்பி அவனோடு போர்புரிந்து அவனைத் தோல்வியுறச் செய்தனன். தோல்வியுற்ற முக்குவர்க ளில் அநேகர் மட்டக்களப்புக்குச் சென்று பாணகை, வலையிறவு முதலிய இடங்களிற் குடியேறினர். இச் சரிதத்தைக் கடலோட்டு, வெடியரசன் சரித்திரம் முத லிய நூல்களால் அறியலாம். 'மண்டு மண்டடா மட் டக்களப்படா' என்ற பாரம்பரியக் கூற்றும் இவ்வுண் மையை நன்கு புலப்படுத்தும். தேசாதிபதி றிக் லொப் வான் கூன்ஸ் யாழ்ப்பாண முக்குவருக்கும், மட்டக் களப்பு முக்குவருக்குமிடையிலுள்ள ஒற்றுமையை எடுத்துக் கூறியுள்ளார் (1).

## 10. மலபார் மொழியும் மக்களும்

மலபார் என்னும் சொல்லை முதலில் உபயோகித் தவர் அப்பரணி (*Abberani*) என்னும் அரேபியரா வர் (2). பின்னர் போத்துக்கேயரும் அச்சொல்லை உபயோகித்தனர். அம்பலக் காட்டில் முதல்முதல் கி. பி. 1577இல் அச்சிட்ட தமிழ்நூல் மலவார் என்று கூறப்பட்டது. மலையாளம் ஒரு தனிமொழியாக கி. பி. 11ம் நூற்றாண்டில் மாறியபோது மலவார் என் பது மலையாளமாக மாறியது. இலங்கையை ஆங்கில

1. Ryk Lof Van Goens, Governor of Ceylon, 1695. 'The inhabitants of Batticaloa both in customs and religion resemble the Jaffnese and are still malabars."
2. Prof V. Rangachari, Vedic India, p. 538—40.

கில அரசுக்குக்கீழ் கொண்டுவந்த கிளெக்கோன் (1), இலங்கைத் தேசாதிபதி சேர் ரூபேற் பிறவுணிங் (2), சேர் எமேசன் ரெனென்ற் (3) என்போரும் யாழ்ப் பாணத் தமிழர்களை 'மலபார்கள்' என்று கூறியிருக் கின்றனர்.

மலையாளம் தனிமொழியாக வருதற்குரிய காரணத்தை டாக்டர் இராசமாணிக்கனுர் பின்வருமாறு கூறுகின்றார். "தமிழ்மொழி கன்னடத்தின் தொடர்பாலும், கிரந்த எழுத்துக்களின் வன்மையாலும், நம்பூதிரிகளின் செல்வாக்காலும், பௌத்த சமணப் பிரசாரம் வடமொழி கலந்த மொழியிற் செய்யப்பட்டமையாலும் கொடுந்தமிழாக மாறிப் பிற்காலத்தில் தனிமொழியாக மாறியது" (4).

மக்களுடைய தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றத்தை சைஸ் கிவித் என்பவர் பின்வருமாறு விளக்கியுள்ளார். "கிறீஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீரியர், அபிசீனியர், பபிலோனியர், பாரசீகர் முதலிய மேனுட்டவர் வந்து மக்களிடையே கலந்துகொண்டதனுல் சேரநாட்டவர்கள் மொழியும், நடையும், உடற்கூறும் திரிந்து தமிழ்நாட்டின் கூறு என்ற குறிப்பே இல்லாதவாறு தோன்றிவிட்டது. இவ்வித மாற்றங்கள் ஏற்பட்டபின்னரும் தமிழ் மக்கள் ஒல்லாந்த தேசாதிபதி கோணீலிஸ் யோான் சிம்மன்ஸ் [*Cornnelis Joan Simonsz*] கேள்விப்படி கிளாஸ் ஐசாக்ஸ் [*Classz Isaacs*]

---

1. Clerghorn; The Dispatch to the Secretary of State.
2. Sir Robert Browning, "The Tamil Language is commonly called Malabar.
3. Sir Emerson Tennent, "The peninsula of Jaffna is at al times infested with Malabars."
4. டாக்டர் மா. இராசமாணிக்கனுர்; தமிழ்மொழி இலக்கிய வரலாறு, பக். 15.

என்பவர் தேசவழமைச் சட்டங்களைத் தொகுத்து "மலபார் தேசவழமைச் சட்டம்" என்னும் பெயரோடு கி. பி. 1707 இல் வெளியிட்டபோது மலபார் என்று கூறப்பட்டதை, அச்சட்டத்தைச் சரிபார்த்துக் கைச்சாத்திட்ட பன்னிரண்டு முதலிமார் தானும் மறுக்கவில்லை. 'மலபார்' என்று தமிழ்மக்களை அழைப்பதை முதல் முதல் மறுத்தவர் சேர். பொன். இராமனுதனவர்கள். அவர் சட்ட அதிகாரியாய் இருந்தபோது 'மலபார்' என்ற சொல்லை அச்சட்ட முகவரியிலிருந்து நீக்கிவிட்டார் (1). டாக்டர் சிவரத்தினம் என்பவர் தமது இலங்கைச் சரித்திரத்தில் 'மலபார்' என்னும் சொல் தமிழ்நாட்டின் சில பகுதிகளில் வசிக்கும் மக்களைக் குறிக்கும் என்று கூறியது பொருத்தமற்றது (2).

## 11. தமிழர் குடியேற்றம்

யாழ்ப்பாணம் இந்தியாவிலிருந்து 36 மைல் தூரத்திலிருந்தும் தமிழ் மக்கள் இங்கு முறையாகக் குடியேறவில்லை. இதற்குக் காரணம் ஆரியர் இலங்கையை இராக்கதபூமி என்று இடைவிடாது செய்த தீவிர பிரசாரமாகும். அவர்கள் இலங்கையின் வடபகுதியில் வசிக்கும் நாகர்களைப் பாம்புகள் என்றும், தென்னிலங்கையில் வசிக்கும் இயக்கர்களை முனிவர்களை விழுங்கும் பேய்கள் என்றும் வருணித்தனர். கி. பி. 5-ம் நூற்றுண்டில் இங்குவந்த சீன யாத்திரிகனுகிய பாகி. யன் (*FaHian*) என்பவனும் அவ்வாறே கூறினுன் (3)

---

1. The New Law Reports. 1911.
2. Dr. C. Sivaratnam; 'Tamils and Early Ceylon.' "They (Malabars) are inhabitants of Pandia, Rameswaram, Coromandel coast and the countries of the Kaveri basin such as Trichinapaly".
3. Fa Hien, 'Ceylon did not have inhabitants at first but demons and dragons'.

யோன் றெசில்டாரும் அதே கருத்தை வெளியிட்டனர் (1). சிங்கள சரித்திர நூலாகிய தீபவம்சமும் அதே கருத்தை வெளியிட்டது (2). விஜயன் காலத்தில் இந்திய மக்களை இங்கு குடியேற வரும்படி கேட்டபொழுது 'கன்னியாகுமரி தொடக்கம் இமயம் பரியந்தம் இருந்த அனைவரும் இராக்கத நாடாகிய இலங்கைக்கு வரமுடியாது' என்று கூறி மறுத்தனர். இக்காலத்திலும் இலங்கைக்கு வரப் பயப்படுகிறவர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் மலையாள மக்களைப்போற் சங்கடப்படவில்லை. சோழ பாண்டிய அரசர்கள் செங்கோல் செலுத்தித் தமது நாடுகளைச் சிறப்புற ஆண்டனர். தொண்டைநாடு சான்றோருடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டிநாடு முத்துடைத்து என்னும் வாக்கியங்களால் அவற்றின் சிறப்பு நன்கு புலனாகும். முத்துக்கள் நிறைய இருந்தாலும் உலகத்தினராற் போற்றப்படும் இரத்தினம் இல்லாத குறை தமிழ் நாட்டிற்கு உண்டு. இரத்தினங்கள் பெருமளவிற் கிடைக்கக்கூடிய இடம் இரத்தினதீபம் என்றழைக்கப்படும் இலங்கையே. உலக வியாபாரப் பொருள்களாகிய கறுவா, இஞ்சி, மிளகு முதலிய பொருள்களும் பெருமளவிற் கிடைக்கக்கூடிய இடமும் இவ்விலங்கையே. இத்தகைய பெருமை வாய்ந்த தீவை, எவ்விதத்திலும் கைப்பற்ற வேண்டும் என்னும் பேராசையால் தூண்டப்பெற்ற சோழபாண்டிய மன்னரும் பிறரும் கி. மு. 117 தொடக்கம் கி பி. 1256ம் ஆண்டு வரையும் இடைவிடாது பலமுறை படையெடுத்தனர். அப்படையெடுப்புக்களில் அடைந்த

---

1. John Tresiddar "Up to the 9th C. A. D. it was believed that demons lived in Ceylon".
2. Deepavamsa, chap, 17—18. "The land contains blood-thirsty demons".

வெற்றிகளும், தோல்விகளும் பலவாகும். தோல்வியடைந்தபோது தப்பி ஓடினவர்களும், சம்பளம் கொடுபடாததனுல் படையைவிட்டு விலகினவருமாகிய பல்லாயிரம் படைவீரர் அமைதியான சுதந்திர வாழ்வுக்கு உகந்த இடமாகிய யாழ்ப்பாணம் வந்து குடியேறினர்.

## 12. தமிழ்நாட்டுச் சாதிகளும் குடியேறிய இடங்களும்

தமிழ்நாட்டிலுள்ள முக்கியம் வாய்ந்த நாற்பத்தெட்டுச் சாதிகளுள் முப்பத்து நான்கு சாதிகளைச் சார்ந்த படைவீரர்கள் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் குடியேறினுர்கள் என்று தோம்புகளைக் கொண்டு ஊகித்து அறியக்கூடியதாயிருக்கிறது.

### (a) சாதிகளும் குடியேறிய இடங்களும்

*(1) அம்பட்டன் வளவு [மல்லாகம்] (2) ஆண்டி-ஆண்டி சீமா [ஆவரங்கால்] (3) இடையன் - இடையன் சீமா [சிறுப்பிட்டி] (4) ராயர் - சேனுதிராயர் வளவு [சுழிபுரம்]. (5) கரையான் - கரையான் தோட்டம் [நவாலி]. (6) கணக்கன் புலம் [மானிப்பாய்]. (7) ஒட்டன்கட்டு [கந்தரோடை]. (8) கள்ளன் - கள்ளன் புலம் [இணுவில்]. (9) கம்பன் சீமா - [சிறுப்பிட்டி, தொல்புரம்]. (10) கன்னுன் பிட்டி [அராலி]. (11) குசவன் கிளனை [கோப்பாய்]. (12) குறவன் கலட்டி [சுன்னுகம்]. (13) கைக்கோளன் - கைக்குளப்பை [தெல்லிப்பழை]. (14) உடையான் வயல் [மண்டைதீவு]. (15) சக்கிலியன் - சக்கிலியாவத்தை [சிறுப்பிட்டி]. (16) சாலியன்*

கொட்டி [இருபாலை]. (17) சிவியான் பிட்டி [வரணி, சிவியாதெரு]. (18) சாண்டான்காடு [சரவணை, சண்டிருப்பாய்]. (19) செட்டியா தோட்டம் [புங்குடுதீவு] (20) நாடார் - தில்லைநாடார் வளவு [நாவற்குழி]. (21) படையாச்சி-படையாச்சி தேனீ [சண்டிருப்பாய்]. (22) பள்ளன்-பள்ளன் சீமா [பெரியவிளான்]. (23) பறையன் - பறையன் தாழ்வு [தங்கோடை]. (24) மாப்பாணன் தூ [புலோலி]. (25) பிராமணன் சீமா [இருபாலை]. (26) வேடுவன் குளம் ]நவாலி]. (27) வன்னியன் ஒல்லை [அளவெட்டி]. (28) மறவன் புலம். (29) வண்ணான் தோட்டம் [நாவற்குழி]. (30) செம்மான் கண்டு [தொல்புரம்]. (31) திமிலன் காடு [அராலி]. (32) துரும்பன் - துரும்பிச்சி ஒல்லை [சரவணை] (33) தச்சன் தோப்பு [கரவெட்டி]. (34) கொல்லன்கலட்டி [தெல்லிப்பழை].

## (b) தொண்டைநாட்டு ஊர்ப்பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

(1) கச்சி - கச்சிஞவடலி [சுன்ஞகம்]. (2) கம்பாநதி - கம்பாமூலை, கம்பாக்கடவை [மல்லாகம்]. (3) ஆலங்காடு - ஆலங்குழாய் [சண்டிருப்பாய்]. (4) காரைக்கால் - காரைதீவு, காரைக்காடு [இணுவில்]. (5) உடுப்பூர் - உடுப்பிட்டி. (6) காஞ்சி - காஞ்சிக்கோட்டம் [மானிப்பாய்]. (7) சோழிங்கன் - சோழங்கன் [கரணவாய்]. (8) தொண்டை-தொண்டைமாறு, தொண்டைமான் தோட்டம் [வட்டுக்கோட்டை]. (9) மயிலம் - மயிலங்காடு ]ஏழாலை].

## (c) சோழநாட்டு ஊர்ப்பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

(1) கண்டி - பொலிகண்டி. (2) ஆவுடையார் கோயில்-ஆவுடையார் பொக்கட்டி. (3) கோட்டைநகர் - கோட்டைக்காடு. (4) குடந்தை - குடத்தனை

*(5) குமாரபுரம் - குமாரசிட்டி [தம்பாலை]. (6) கோயில் - கோயிலாக் கண்டி, கோயிற்கடவை. (7) தாழையூத்து - தாழையடி. (8) தில்லை - தில்லையிட்டி [சுன்னுகம்]. (9) துவ்வூர்-தூ [வடமராட்சி]. (10) தோப்பூர்-தோப்பு (அச்சுவேலி, தோப்புவளவு [சுன்னுகம்]. (11) நயினுகரம்-நயினுதீவு. (12) நார்த்தாமலை - நார்த்தாவளை. (13) நாவல் - நாவற்குழி. (14) நல்லூர் - நல்லூர். (15) லயலூர் - வயலூர் [அரியாலை, கோப்பாய்]. (16) கோம்பை - கோம்பையன்திடல் [வண்ணுர்பண்ணை].*

## (d) பாண்டிநாட்டு ஊர்ப்பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

*(1) கோம்பி - கோம்பிசிட்டி [வேலணை]. (2) சாத்தன் - சாத்தன்குளம் [தங்கோடை], சாத்தனுவத்தை [தெல்லிப்பழை]. (3) சுழியல் - சுழிபுரம் (4) தம்பன் வயல். (5) நீராவி - நீராவியடி [வண்ணுர்பண்ணை]. (6) நெல்வேலி - கொக்குவில், திருநெல்வேலி.*

## (e) கொங்குநாட்டு ஊர்ப்பெயரோடு கூடிய குடியேற்றங்கள்

*(1) உடுமலைப்பேட்டை - உடுமலாவத்தை. (2) காரமடை-காராமட்டை [நெடுந்தீவு]. (3) கல்லார் [நீலகிரி] - கல்லாரை [மல்லாகம்]]. (4) கொங்குநாடு - கொங்காவோடை [ஆவரங்கால்] (5) சிங்கநல்லூர் - சிங்காவத்தை [தெல்லிப்பழை]. (6) தொளசம்பட்டி - தொளசம்பத்தை [மயிலிட்டி]. (7) மாணு - மாணுவத்தை [மாணுமுதலி].*

## 12. பிறநாட்டுக் குடியேற்றம்

**ஆந்திர தேசம் :** கஞ்சாம் - கஞ்சாம்பத்தை (சுழிபுரம்). (2) கதிரி - கதிரிப்பாய். (3) நக்கன் தொட்டி - நக்கட்டி உடையாபிட்டி. (4) வடுகு - வடுகாவத்தை (சுன்னாகம், தெல்லிப்பழை) (5) அந்திரன் - அந்திரானை (தொல்புரம், வட்டுக்கோட்டை). (6) வேங்கடம் - வேங்கடன் (சங்கானை).

**கன்னடதேசம் :** (1) கன்னடி-மாவிட்டபுரம். (2) குலபாளையம்-குலனை (அராலி). (3) சாமண்டி மலை - சாமண்டி (மாவிட்டபுரம்). (4) மாலூர் - மாலாவத்தை (புன்னாலைக் கட்டுவன்). (5) பச்சூர் - பச்சந்தை (கட்டுவன், தொல்புரம்). (6) மூடோடி-முட்டோடி (ஏழாலை).

**துளுவம் :** (1) துளு-அத்துளு (கரவெட்டி). (2) துளுவம் - துளுவன் குடி (அளவெட்டி).

**கலிங்கம் :** (1) கலிங்கம் - கலிங்கராயன் வயல் (நீர்வேலி). (2) கலிங்கராயன் சீமா (கட்டுவன்),

**ஒரியா :** ஒரியாத்திடல் (வேலணை).

**சீனு :** சீனன்வயல் (சண்டிருப்பாய்).

**மகமதியர் :** (1) உசன் (தென்மராட்சி). (2) மரக்காயன் தோட்டம் - நவாலி. (3) துலுக்கன் புளி - அல்லைப்பிட்டி.

**புத்தர் :** புத்தர் கோயில், புத்தர் குடியிருப்பு, புத்தர்புலம் (நுணுவில்)

---

Andras: Many Telugu people came during the reign of Mahendra Singh (1707-1730), R. A. S. Vol. xxx, No. 80, p 223.

**களப்பிரர்:** களப்பிராவத்தை (புலோலி).

**இயக்கர்:** இயக்குவளை (கொக்குவில்).

**யாவகர்:** சாவகச்சேரி, சாவரோடை (சுழிபுரம்).
சாவன்கோட்டை (நாவற்குழி).

யாழ்ப்பாணத்திற் குடியேறியவர்களின் தொகை 40000 வரையிலிருக்கலாம் என்று தோம்புகளின் அடிப்படையில் ஊகிக்க இடமுண்டு. குடியேறியவர்களின் வீதம் வருமாறு:

| | |
|---|---|
| சேரநாட்டுத் தமிழர் | 48% |
| தமிழ் நாட்டவர் | 30% |
| பிறநாட்டினர் | 22% |

## 13. தமிழர் ஆதிக்கம்

யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த நாகர், லம்பகர்ணர் என்போருடைய ஆட்சிகள்முறையே கி பி. 303, கி. பி. 556. என்னும் ஆண்டுகளோடு முடிவடைந்தது. இதன் பின்னர் குடியேறிய படைவீரர்களுடைய ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியது. மறவர்கள் வடகிழக்கிலும், தென்கிழக்கிலும், பாணர்கள் தென்மேற்குப் பகுதிகளிலும் ஆட்சிப் பீடங்கள் அமைத்தனர். அவை வடமருச்சி (வடமறவர் ஆட்சி, தென்மருட்சி (தென்மறவர் ஆட்சி) என்னும் பெயர்களைப் பெற்றன. பாணர்கள் அமைத்த ஆட்சிப்பீடம் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது கி. பி. 6ம், 7ம், 8ம் நூற்றுண்டுகளில் சிங்கள அரச குடும்

1 'களப்பிரர் என்னும் சாதியார் கி. பி. 5ம் நூற்றுண்டில் தமிழ் நாட்டை ஆண்டனர்".
Dravida, p. 32, A L. Tambimuthu.

பங்களுக்குள் ஏற்பட்ட கலகங்கள் காரணமாக அநேக அரசர்களும், பிரமுகர்களும் கொல்லப்பட்டனர் இது காரணமாக யாழ்ப்பாணத்திற் சிங்களவருடைய ஆதிக்கம் நிலைகுலைந்தது. இதைக்கண்ட மறவர், பாணர் முதலிய தமிழ்ப்பிரமுகர்கள் சிங்கள அரசுக்கு மாறாக வரிகொடா இயக்கத்தையும், நிலச்சுவீகரிப்பு இயக்கத்தையும் தொடங்கிப் பூரணவெற்றி பெற்றனர். இவ்வெற்றி சிங்களவரை யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறச் செய்தது. சகல வாய்ப்புகளும் நிரம்பிய இந்த நேரத்தில் தமிழ்ப் பிரமுகர்கள் ஒன்றுகூடி யாழ்ப்பாணத்தில் ஓர் தமிழரசைத் தாபிக்க முடிவுசெய்து தங்கள் தலைவனாகிய பாண்டி மழவனை மதுரைக்குப்போய் ஒரு இராசகுமாரனை அழைத்து வருமாறு அனுப்பினர்.

## 14. தமிழரசு

பாண்டிமழவன் மதுரைக்குப் போய், இராமபிரானாற் சேதுவை காவல் செய்யுமாறு நியமிக்கப்பட்ட இருவரின் வழித்தோன்றலும், சேதுபதி அரசர்களின் வம்சத்தொடர்பு உடையவனும், பாண்டிய மன்னனின் சேனைத் தலைவனுமாக விளங்கிய சிங்கையாரியனை (கூழங்கையனை) அழைத்துவந்து முடிசூட்டி யாழ்ப்பாணத்துக்கு அரசனாக்கினான். ஆரியன் என்னும் சொல் ஓர் உபசாரப் பட்டமேயன்றி பிராமணத் தொடர்பைக் குறிக்காதென்பது 'ஆரியவேந்தனென்றணிமணிப் பட்டமும் நல்கி' என்றும் செகராச சேகரமாலைப்பாட்டால் விளங்கும். அரசர்கள் தங்கள் உயர்பதவிக்கேற்ப உயர்குலப் பட்டங்களைத் தங்கள் பெயரோடு சேர்த்து எழுதுதல் மரபு. கலிங்க அரசர்கள் தங்களைக் கங்கா குலத்தவரென்றும், சேர அரசர்கள் தங்களை அக்கினி குலத்தவரென்றும், பாண்டிய அரசர்கள் தங்களைச் சந்திர குலத்தவர்


என்றும் கூறுவது அக்கால வழக்கமாக இருந்தது, கலப்பு விவாகம் பிராமணருக்கும், மறவருக்கும் இடையில் நடக்கும் வழக்கம் இல்லை. நடந்தாலும் கலப்பு விவாகத்தாற் பிறந்த பிள்ளைகளுக்கு அரசுரிமை கிடையாது. ஆரியன் என்ற சொல்லில் மயங்கி டாக்டர் லிவரு, கீயுரூஸ் (*Queiroz*), காசிச் செட்டி முதலியோர் சிங்கையாரியனுக்குப் பிராமணத் தொடர்பு கற்பித்தனர்.

ஆரியச் சக்கரவர்த்திகள் செந்தமிழ் பேசுந் தமிழரேயன்றித் தெலுங்கு பேசும் கலிங்க நாட்டவரல்லர். அரசகுமாரர்கள் தமிழ் நாட்டில் இருக்கும்போது பாண்டிமழவன் அவர்களைத் தேடி ஆயிரம் மைலுக் கப்பாலுள்ள கலிங்க நாட்டிற்குப் போகவேண்டிய அவசியமே இல்லை. இராசநாயக முதலியார் சிங்கையாரியனை கலிங்கதேசத்தவனுக்கினது சிறிதும் பொருந்தாது. ஆரியச் சக்கரவர்த்திகள் எல்லாரும் தமிழ்மொழி பேசினரேயன்றித் தெலுங்கு முதலிய பிறமொழிகளைப் பேசினர் என்பதற்குஒருவகையான ஆதாரமும் கிடையாது. அவர்கள் தமிழ்மொழி பேசினர் என்பது 'கூயுரூஸ்' என்பவர் கூற்றினல் அறியலாம் (1) யாழ்ப்பாணத் தமிழரசர்கள் இராமேஸ்வரத்தை ஆண்ட சேதுபதி அரசர்களுக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது, அவர்களது நாணயங்களில் சேது என்னுஞ் சொல் பொறிக்கப்பட்டிருப்பதாலும் அறியலாம்.


## 15. தமிழரசும் குடியேற்றக்காரரும்

தமிழரசு கி. பி. 795இல் யாழ்ப்பாணத்தில் தொடங்கியபோது குடியேற்றக்காரருக்கு நல்ல

1. Quyroz "The Tamils who lived in the eastern and northern provinces had no language problem as they were ruled by their own kings".



நல்லூர்க் கந்தசுவாமி கோயில்



கீரிமலைத் தீர்த்தக்கேணி

காலம் பிறந்தது. தமிழரசின்கீழ் உயர்ந்த உத்தியோகம் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அவர்களுக்கு இரண்டு குறைகள் அவ்வுத்தியோகங்களைப் பெறத் தடையாயிருந்தன. அவை படைகளைவிட்டு விலகி மறைமுகமாகக் குடியேறினது, உயர்குடிப் பிறப்பின்மை என்னும் இரண்டுமாகும். அவற்றை நீக்கி மதிப்புடன் அரசியலில் உயர்ந்த பதவிகளில் அமரவேண்டும் என்னும் பேரவாவினால் தூண்டப் பெற்ற மழவர், பாணர் முதலியோர் பல வழியிலும் அக்குறைகளை நீக்க முயற்சி செய்தனர். இதே சமயத்தில் இடைச்சாதிகளைச் சேர்ந்த பலர் தங்கள் சாதிப் பட்டங்களை மறைத்து வேளாளருக்குரிய பிள்ளை, முதலி என்னும் பட்டங்களைத் தமது பெயரோடு வைத்து வேளாளராக முயன்றனர் என்பதைப் பின்வரும் நாட்டுப் பாடலால் அறியலாம்.

கள்ளர் மறவர் கனத்ததோர் அகம்படியர்
மெள்ள மெள்ள வெள்ளாள ராயினர்.'

இந்தச் சூழ்நிலையிற் படைவீரர்களாகிய மழவர், பாணர் முதலியோர் தாம் தொண்டை நாட்டிலிருந்து விசேட அழைப்பின் பேரில் வரவழைக்கப்பட்ட உயர்குடி வேளாளர் என்று வாய்ப்பேச்சாலும், நூல்கள் மூலமும் பிரசாரஞ் செய்தனர். அவ்வகைப் பிரசாரத்துக்காக எழுந்த நூல்களை வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்பன.

## 16. வையா பாடல்

வையா பாடல் என்னும் நூல் செகராச சேகர மகாராசாவின் சமஸ்தான வித்துவானாகிய வையாபுரி ஐயரால் கி. பி. 16வது நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

இந்நூலிற் கூறப்பட்ட கதைகள் யாவும் பொதியமலையில் வாழ்ந்த அகத்திய முனிவரது பேரனாகிய சுபதிட்ட முனிவர் கூறிய கதையைத் தழுவித் தாம் நூலை இயற்றியதாக நூலாசிரியர் கூறியுள்ளார். நூலிற் கூறப்பட்ட கதைகள் யாவும் பகுத்தறிவுக்கும் அநுபவத்திற்கும் ஒவ்வாத கொள்கைகளை உடையன வாதலால் இந்நூல் முறையான சரித்திர நூலென்று கொள்வதற்கில்லை. இனி நூலைப்பற்றி ஆராய்வாம்.

(1) பழைய காலத்தில் அகத்தியர் பலர் இருந்ததாக ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். அவர்கள் (1) இராமாயணகால அகத்தியர் (கி. மு 2000) (2) பாரதகால அகத்தியர் (கி. மு. 1800) (3) வேதகால அகத்தியர் (கி. மு. 1500) (4) சங்ககால அகத்தியர் (கி. மு. 800) (5) பாணினிகால அகத்தியர் (கி. மு. 500) எனப் பலராவர். இராமாயண காலத்தில் பொதியமலையில் அகத்தியர் ஒருவர் வாழ்ந்தார் என்பது வால்மீகி இராமாயணத்தால் அறியலாம் (2). வேதகால அகத்தியர் உலோபாமுத்திரையை விவாகஞ் செய்ததாக வேதங்கள் கூறுகின்றன. உலோபாமுத்திரைக்குச் சித்தன் என்னும் புத்திரன் ஒருவன் இருந்ததாகக் கந்தபுராணம் கூறும். பொதியமலை அகத்தியர் விவாகஞ் செய்ததாகச் சரித்திரங்கள் கூறக் காணேம். இது மெய்யானல் சுபதிட்ட முனிவர் ஒரு கற்பனை முனிவராவர். அவர் கூறியதாகச் சொல்லப்படும் கதையும் கற்பனையின் பாற்படும். அப்படி ஒரு முனிவர் இருந்தார் என்று வைத்துக்கொண்டாலும் அவர் எவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் நிகழ்ந்த குடியேற்றத்திற் பங்கு

1. "தமிழ்நாட்டில் எத்தனையோ அகத்தியர் பேசப்படுகின்றனர்", அ. மு. பரமசிவானந்தம், "வரலாற்றுக்கு முன் வடக்கும், தெற்கும்", p. 73.
2. வால். இரா. கிட்கி. காண், 5—41, 15—16.

பற்றிய இருநூறுக்கு மேற்பட்ட பெயர்களைக் கூற முடியும். அக்கதை மூவாயிரத்தைந்நூறுண்டுகளுக் குப்பின் வாழ்ந்த வையாபுரி ஐயருக்கு எப்படிக் கிடைத்தது என்பதைப் பற்றிய விளக்கம் ஒன்றும் நூலில் தரப்படவில்லை.

(2) இலங்கையை ஆண்ட மன்னர்களின் குலங் களைப்பற்றிக் கூறுதல் இந்நூலின் முதலாவது நோக் கமாகும். நூலாசிரியர் தமது மன்னனுகிய செகராச சேகரனைப் பற்றியாவது, அவனுக்கு முன் அரசாண்ட மன்னர்களைப் பற்றியாவது ஒன்றும் கூருது, முதலா வது அரசனுகிய கூழங்கைச் சக்கரவர்த்தியைப்பற்றி விளக்கியுள்ளனர். அவ்விளக்கத்தில் பல பிழைகள் மலிந்து கிடக்கின்றன. தசரதன் மைத்துனனுகிய குலக்கேதுவின் மகன் கூழங்கைச் சர்க்கரவர்த்தியை விபீடணன் காலத்துள்ள யாழ்ப்பாடி ஒருவன் மணற் றிடல் நாட்டிற்கு யாழ்ப்பாணம் என்னும் பெயரைச் சூட்டி அந்நாட்டிற்கு அரசனுக்கினன் என்று கூறப் பட்டுள்ளது. விபீடணன் காலம் கி. மு. 2000 ஆண் டாகும். அக்காலத்தில் வாழ்ந்த யாழ்ப்பாடி கூழங் கையனுடைய முடிசூட்டு விழாவை எவ்வாறு கி மு. 101 இல் நடாத்த முடியும். இது கற்பனையின் பாற் படும்.

யாழ்ப்பாணம் என்னும் பெயர் கி. பி. 15ம் நூற் ருண்டில் வழங்கிவந்ததன்றி கி. மு. 101 இல் வழக் கில் வரவில்லை (1).

கைலாய மாலையின்படி கூழங்கைச் சக்கரவர்த்தி பாண்டியன் மகனுவான். யாழ்ப்பாண வைபவமாலைப் படி அவன் சோழ அரசன் மகனுவான். வையா பாடல் அவனைத் தசரதன் மருமகனெனக் கூறும்.

---

3. செ. இராசநாயக முதலியார், யா. சரி. பக். 253.

சுவாமி ஞானப்பிரகாசரும், இராசநாயக முதலியாரும் அவனைக் கலிங்க நாட்டவன் என்று கூறுவர் (1). 'காலிங்க' என்னும் சொல் கூழங்கையாக மாறியது என்பது இராசநாயக முதலியார் கருத்து (2). இக் கூற்றுப் பொருத்தமற்றது. ஆரியச் சக்கரவர்த்திகள் சுத்த தமிழ்பேசும் தமிழர்களேயன்றிப் பிறநாட்டவரல்லர். சி. எஸ். நவரத்தினமவர்கள் கலிங்கர் தமிழினத்தோடு தொடர்பு பூண்டவர்கள் என்று கூறியதும் பொருந்தமற்றது (3).

(2) வையா பாடலின்படி கூழங்கைச் சக்கரவர்த்தியின் முடிசூட்டு வைபவம் கி. மு. 101 இல் நடந்தது என்று கூறப்பட்டது பொருந்தாது. கி. மு. 101 இன் முன் ஏழு பாண்டியரும், பின் நாகரும், லம்பகர்ணரும், பாண்டியரும், சிங்களவரும், மாறிமாறி யாழ்ப்பாணத்தை ஆண்டுவந்தபடியால் அங்கு வேற்றரசன் ஒருவன் அரசனுயிருக்கமுடியாது. மேலும் ஒப்புயர்வற்ற பெரும்புகழ் படைத்த எல்லாள மன்னனும், அவன் மருகனும், அவர்களோடு வந்து போர்புரிந்த பல்லாயிரவருட் பெரும்பாலாரும் யுத்தத்தில் மடிந்ததை முன்னிட்டு யாழ்ப்பாணத்தவரும், தமிழ்நாட்டவரும் துக்கக் கடலில் மூழ்கிக்கிடக்கும் அந்த அமங்கலமான ஆண்டில் (கி. மு. 101) கூழங்கைச் சக்கரவர்த்தியின் மங்கலமான முடிசூட்டு வைபவம் ஒரு போதும் நடந்திருக்காது.

1. சுவாமி ஞானப்பிரகாசர், யாழ்ப்பாண வைபவ விமர்சனம், பக். 63.

2. இராசநாயக முதலியார், யாழ். சரி. பக். 49.

3. C. S. Navaratnam, Tamils and Ceylon, p. 221. "The Kalinga and [Lunar dynasties that ruled Ceylon were Tamils more or less."

(3) இனி வையா பாடலின் இரண்டாவது நோக்கமாகிய குடியேற்றத்தைப் பற்றி ஆராய்வாம். மக்கள் ஒரு நாட்டை விட்டு வேறு நாட்டுக்குப்போய்க் குடியேறுவதற்குக் காரணங்களாக இருப்பவை உள்ளூர்க் கலகம், பஞ்சம், கொடுங்கோலரசு, வேலை வாய்ப்பின்மை என்பன. தமிழ்நாட்டில் மேலே கூறப்பட்டன ஒன்றும் இல்லாதபோது, மக்கள் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. குடியேறப்போகும் நாடு முனிவர்களை விழுங்கும் இராக்கதர் வசிக்கும் நாடாயிருக்கும் போது, மக்கள் குடியேற்றத்தைப்பற்றிக் கனவிலும் நினைக்க மாட்டார்கள். அவ்வாறாயின் அங்கு குடியேறியவர் யார்? என்ற கேள்வி எழும். அங்கு குடியேறியவர்கள் சோழபாண்டியர்களின் படைவீரர்களுள் தமது நாட்டுக்குந் திரும்பிப் போகாது அங்கே தங்கியவர்களும், கி. பி. 34 க்கும், கி. பி. 809 க்கும் இடையில் நடந்த சிங்கள அரசரின் குடும்பக் கலகங்களில் ஈடுபட்ட இந்தியக் கூலிப்படை வீரருமாவர். படைகளோடுவந்த வன்னியர் பெரும்பாலும் வன்னி நாட்டிற் குடியேறினர் என்பது சீ. எஸ். நவரத்தினம் என்பவர் கருத்தாகும். அவர் கூற்று வருமாறு :-

*" It is plausible to state that the vanniars were the remnants of the Tamil armies that were periodically brought to the country by the aspirants to the throne of Lanka or by invading princes and chiefs. "* *(Tamils and Ceylon, p.* 108)

இதே கருத்தைச் சுவாமி ஞானப்பிரகாசரும் தாம் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலை விமர்சனத்திற் கூறியுள்ளார். அது வருமாறு :-

" இலங்கைமேற் படையெடுத்து எழுந்த வெற்றியாளரைத் தொடர்ந்த தமிழ் வீரர்களின் குடும்பங்களாலும், அன்னோருடன் குடியேறிய பரிசனங்க்

ளாலும் மட்டுமன்று, இளநாகன் கி. பி. (31—41)... ......... ஆதியாம் சிங்கள அரசர்கள் தத்தம் உள்ளூர்ச் சமர்களுக்கு உபபலமாகச் சோழ பாண்டிய நாடுகளினின்றும் அவ்வக்காலம் வரித்த தமிழ்ச் சேனைகளில் எஞ்சி நின்றோராலும் ராஜரட்டம் மலிந்து பொலிந்தது " (1).

இராசநாயக முதலியாரும் இது விஷயமாகப் பின்வருமாறு கூறியுள்ளார் ;-

" பிற்காலத்தில் சோழ பாண்டியர்களுடன் வந்த போர் வீரராகிய வன்னியர் சிலர் இலங்கையில் தங்கிக் கோயில் அதிகாரத்தைக் கைப்பற்றினதுமன்றி, மன்னார் முதல் திருக்கோணமலை வரையும், யானையிறவு முதல் காட்டுத் தம்பளை வரையும் உள்ள பரந்த பிரதேசத்தின் அதிகாரிகளாகவும், சிற்றரசர்களாகவும் இருந்தார்கள் (2).

சுவாமி ஞானப்பிரகாசரும், இராசநாயக முதலியரும் கூறிய குடியேற்றம் உண்மைக் குடியேற்றமாகும். சுவாமி ஞானப்பிரகாசர் கூறியபடி வையா பாடலிற் காணப்படும் குடியேற்றம் ' குசக்கு மசக்கான சரித்திர மாறுபாடோடு கூடிய பின்னலாகக்' காணப்படுகிறது. அப்பின்னலை வெட்டிப் பிரித்துப் பார்க்கும்போது அக்குடியேற்றம் வெறுங் கற்பனைக் குடியேற்றமாகத் தோற்றமளிப்பதைக் காணலாம்.

## 17. வையாபாடற் குடியேற்றம்

இனி வையாபாடலிற் காணப்படும் குடியேற்றக் கதையைப்பற்றி ஆராய்வாம். யாழ்ப்பாடி கூழங்கைச் சக்கரவர்த்தியை மணற்றிடற் காட்டை ஆளும்படி

1. யாழ். வை. மா. விமர்சனம்
2. யா. சரி., பக். 24.

விட்டு மறைந்துவிட்டான். அவன் மக்களைக்கொண்டு வந்து மணற்றிடற் காட்டிற் குடியேற்ற முயற்சிக்க வில்லை. கூழங்கைச் சக்கரவர்த்தியும் மௌனமாயிருக்கிறார். குடியேற்றம் வேறொரு விதமாக நடைபெறுகிறது. மாருதப்பிரவல்லியின் மகனாகிய சிங்க மன்னவன் என்பவன் தன் மாமனாகிய சிங்ககேதென்பவனிடம் பெண் கேட்க அவன் தன் மகள் சமதுதியை அறுபது வன்னியரோடு அனுப்பிவைத்தான் என்பது வையாபாடலின் கூற்றாகும். கலியாணம் முடிந்ததும் சிங்கமன்னவன் அடங்காப் பகுதிக்கு அரசனாகிறான். மணவினைக்காக வந்த அறுபது வன்னியரையும் உடனே அடங்காப்பற்றிற் குடியேறும்படி அனுப்புகிறான். அவர்கள் அங்கு அரசாட்சி செய்யும் இராக்கதரோடும், மற்றவர்களோடும் போர் புரிய ஆட்கள் போதாமையால் மதுரையைச் சார்ந்த இடங்களிலிருந்து வன்னியர்களை வருவித்து இராக்கதர்களோடு கடும்போர் புரிந்தனர். போரில் ஐம்பத்து நான்கு வன்னியர் இராக்கதராற் கொல்லப்பட்டனர். இராக்கதரை எதிர்த்துப் போராட மேலும் பலசாதி மக்களையும், வருவித்துப் போராடி இராக்கதர்களையும், சாண்டாரையும், பறையரையும் வென்று வன்னிநாடு முழுவதுக்கும் அரசனாக இளஞ்சிங்கவாகு என்ற வன்னிய வீரன் விளங்கினான். சிங்க மன்னவன் வன்னியர் வருகையோடு மறைந்துபோகிறான். வன்னியர் அழைப்புக்கு இணங்கி வந்தமக்கள் அடங்காப்பற்றிலும், யாழ்ப்பாணத்திலும், பிற இடங்களிலும் குடியேறினதாகக் கூறப்பட்டுள்ளது. வன்னியர் என்போர் சோழபாண்டிய அரசரின் படைகளிற் பணிபுரியும் போர்வீரராவர். அப்படிப்பட்ட சாதாரண போர்வீரருடைய வேண்டுகோளுக்கிணங்கி நாற்பதுக்கு மேற்பட்ட சாதிகளைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் மதுரைப் பக்கங்களிலிருந்து தங்கள் வீடுகளையும், நிலம்புலங்களையும் விட்டு மனைவி

மக்களோடு ஒருவருடைய உதவியுமின்றி இராக்கதர்களைக்கொன்று நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தக் கொடிய மிருகங்களும், இழிசனர்களும், இராக்கதர்களும் வாழும் அடங்காப் பற்றெனும் காட்டுப் பிரதேசத்துக்கு வந்து குவிந்தார்கள் என்ற கூற்று நம்பக்கூடியதன்று. வந்த நோக்கம் நிறைவேறியதும் விசாலமான வன்னிநாட்டில் இளஞ்சிங்கவாகுவின் ஆட்சியில் பாதுகாப்போடு குடியேறியிருக்கலாம். தக்க நியாயமின்றி வந்தவர்களில் அநேகர் யாழ்ப்பாணம் வந்து பல விடங்களிலும் குடியேறினதாகக் கூறப்பட்டது பொருந்தாது.

வையா பாடலிற் கூறப்பட்ட குடியேற்றத்தின் மூன்றாவது நோக்கம் இராக்கதரைக் கொன்று நல்லாட்சி நிறுவுதலாகும். இராம ராவண யுத்தத்தின் பின்னர் இராக்கதர்கள் இலங்கையில் எஞ்சியிருந்தார்கள் என்ற கூற்று பொருத்தமில் கூற்றாகும். தெய்வ வலிமைமிக்க கந்தனும், மந்திர வலிமை மிக்க அகத்தியனும், போர்வலிமை மிகுந்த இராமனும், ஆத்மீக வலிமைமிக்க புத்தனும் அரக்கரை அடக்கிச் செந்நெறிப்படுத்தியதன் பலனாக த்ராஸ, தஸ்யு, பிருங்கலாதன், பைஜவனன், விபீடணன் முதலிய அரக்கர்கள் ஆரியகுலத்தோடு சேர்க்கப்பட்ட பின்னரும் இராக்கதர் இலங்கையில் வாழ்கின்றனர் என்னும் பேச்சுக்கே இடமில்லை (1). அவர்கள் இருந்தார்கள் என்று வைத்துக்கொண்டாலும் வன்னியர்கள் அவர்களைப் போரில் வென்றார்கள் என்றது பொருத்தமில் கூற்றாகும்.

கி. பி. 101க்குப் பிற்பட்ட காலத்தில் யாழ்ப்பாணம் உட்பட்ட வடவிலங்கையில் தமிழ்நாட்டு மக்கள் நேரடியாக இங்குவந்து குடியேறினர் என்

1. ரா. இராகவஐயங்கார் தமிழ் வரலாறு, பக். 64.

என்பது பொருந்தாது. இக்காலம் சிங்கள அரசர்களுக்கிடையில் அரசுரிமைக்காகக் கடுமையான போட்டியும், கலகமும் ஏற்பட்ட காலமாகும். இக் காலத்தில் எங்குஞ் சண்டையும், கொலையும், புரட்சியும், தற்கொலையும் நிகழ்ந்தன. சிங்கள அரசர்கள் போருக்காகத் தமிழ்க் கூலிப்படைகளை இந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவந்து பெருமளவிற் குவித்தனர். தமிழர் சனத்தொகை அதிகரித்தது. கூலிப்படைகளுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடாதபடியால் அவர்கள் கொள்ளையடிப்பதிலும், களவெடுப்பதிலும் ஈடுபட்டுச் சனங்களை வருத்தினர். இதனுல் விவசாய முயற்சி குறைந்ததன் காரணமாகப் பஞ்சமேற்பட்டது. மக்களைப் பசியும், பிணியும் வாட்டியது (1). சிங்கள அரசர் கொடுமையும் அதிகரித்தது. இச் சூழ்நிலையில் மக்கள் பெருமளவில் இந்தியாவுக்குத் திரும்பிப் போயினர் (2). ஆகையால் இக்காலத்தில் இந்தியாவிலிருந்து இங்குவந்து மக்கள் குடியேறினர் என்பது பொருந்தாது.

வையாபாடற் குடியேற்றத்தில் பங்குபற்றும் இருநூறுக்கு மேற்பட்டவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. குடியேற்றக்காலம் கி. மு. 101க்குப் பின்னுள்ள காலமாகும். சுபதிட்டமுனிவர் இக்காலத்துக்கு இரண்டாயிரம் ஆண்டு முற்பட்டவர். வையாபுரி ஐயரோ ஆயிரத்து எழுநூறு வருடங்களுக்குப் பிற்பட்டவர். இவர் அந்தக் காலத்தில் குடியேறியவர் பெயர்களை கர்ண பரம்பரையாக ஒருபோதும்

1. "Owing to commotion, there was famine and pestilence. Agriculture was neglected "Large no of people fled to India", C. S. Navaratnam, Tamils and Ceylon, p. 65.

2. " அக்காலத்தில் சிங்களவரும் பிறரும் இந் நாட்டை ஆளக்கருதித் தமிழ்மக்களை ஒடுக்கியபடியால் தமிழ் மக்கள் தமிழ்நாட்டுக்குப் போய்விட்டார்கள் "

யா. வை. மாலை, பக் 24.

அறியமுடியாது. ஆகையால் குடியேற்றம் அக்காலத்தில் நடந்தது என்பதும், நூலிற் கூறப்பட்ட இருநூறுக்கு மேற்பட்டோர் குடியேறினர் என்பதும் வெறும் கற்பனையாகும்.

வையாபாடல் நூலாசிரியர் கற்பனைக் கதையில் ஈடுபட்டாரொழிய உண்மைச் சரித்திரத்தில் ஈடுபடவில்லை. அவர் கூறிய குடியேற்றக் காலத்தில் நடைபெற்ற சோழ பாண்டிய படையெடுப்புக்களைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. யாப்பையினுர், மூக்கையினுர், கேப்பையினுர், ஊமைச்சியார், மெச்சன் (பறையன்), நீலப்பணிக்கன் (அம்பட்டன்) முதலிய குடியேற்றக்காரருக்குச் சரித்திர முக்கியத்துவம் கொடுத்த நூலாசிரியர் பல்லாயிரம் சேனுவீரரோடு இலங்கைமேற் படையெடுத்து வெற்றிக்கொடி நாட்டி நாற்பத்துநான்கு வருடம் செங்கோல் செலுத்தி அழியாப் புகழ்பெற்ற எல்லாள மகாராசாவின் பெயரையாவது, பாண்டிய அரசர்களின் பெயர்களையாவது தமது நூலிற் கூருதுபோனது வியப்பைத் தரும் விஷயமாகும். சுபதிட்ட முனிவருக்கு இச்சரிதம் ஒருபோது தெரியாமலிருக்கலாம் சமஸ்தான வித்துவாஞகிய நூலாசிரியர் இச்சரித்திரத்தை அறியாமல் இருக்கமுடியாது. எல்லாளனேடும் மற்றைய படையெடுப்புக்காரரோடும் வந்த படைவீரர் யாழ்ப்பாணம் வந்து குடியேறினர் என்னும் உண்மையை மறைப்பதே இந்நூலின் நோக்கங்களில் ஒன்று என்று முன்னரே கூறப்பட்டது.

மணவினை சம்பந்தமாகச் சமதுதி என்னும் சோழ ராசகுமாரியோடு கூடிவந்த அறுபது வன்னியரும் அவர்கள் வந்த நோக்கத்துக்கு முழுமாருக அடங்காப்பற்றுக்கு அனுப்பப்பட அவர்களுள் ஐம்பத்து நான்கு பேர் இராக்கதரால் கொல்லப்பட்டனர். ஆகையால் இது ஒரு ஏமாற்றமான குடியேற்றம் என்றும் கூறலாம்.

வையா பாடலிற் பல தடுமாற்றமான கொள் கைகள் கூறப்பட்டுள்ளன. அடங்காப்பற்று பிற்கா லத்தில் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட [illegible] முற்காலத்தில் பிரிக்கப்படவில்லை. மடப்பளியார், கோவியர், என்னும் இரு சாதிகளும் யாழ்ப்பாணத் திற் பிற்காலத்தில் தோன்றினவேயன்றிக் குடியேற் றக் காலத்தில் தோன்றியவையல்ல. பறங்கிகளும் பிற்காலத்தில் வந்தவரேயன்றி குடியேற்றக் காலத் தில் வரவில்லை.

இந்நூலிற் கூறப்பட்ட குடியேற்றம் படைவீரர் களது குடியேற்றம் என்று கூருது பொதுமக்களது குடியேற்றம் என்று கூறியதால் பாணர், மழவர் முதலியோருடைய குறைகளில் ஒன்று நீங்கிற்று. அவர்களைத் தொண்டைநாட்டு உயர்குடி வேளாளர் என்று கூறி உயர்குடிப் பிறப்பின்மை என்னும் குறையை நீக்க நூலாசிரியர் முன்வரவில்லை. நூலா சிரியர் ஐந்து தேவர்கள், மூன்று பாணர்கள், இரண்டு ராயர்கள் முதலியோர்களது பெயர்களைக் குறித்துள் ளனரேயன்றி ஒரு வேளாளனுடைய பெயர்தானும் குறிக்கப்படவ்ல்லை. இக்காரணம்பற்றி அந்நூல் அவர் களால் முற்ருக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சாதி மாறல் செய்து தம்மை உயர்குடி வேளாளராக்கக் கூடிய வேருெரு நூல் அவசியம் வெளிவரவேண்டியி ருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்ற எழுந்த நூலே கைலாயமாலையாகும்.

## 18. கைலாயமாலை

கைலாயமாலை என்னும் நூல் உறையூர் முத்து ராசரால் இயற்றப்பட்டது. அவரைப்பற்றிய சரித் திரம் ஒன்றும் தெரியவில்லை. தமிழ் நாட்டவர் அவர் யாழ்ப்பாணத்தில் குடியேறியவர்களுள் ஒருவராயி

ருக்கலாம் என்கின்றனர் (1). யாழ்ப்பாணத்தவர் அவரைத் தமிழ்நாட்டவர் என்கின்றனர். அவர் தமது நூலில் தேச வழமைக்கும், சாதி மரபுக்கும் முழுமாறன கொள்கைகளைப் புகுத்தியிருப்பதாலும், தமிழ் நாட்டில் வழக்கிலிருக்கும் வேளாளர் உட்பிரிவுகளை எடுத்துக் கூறுதபடியாலும் அவர் யாழ்ப்பாணத்தவராயிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. ஒரு போது முத்துராசர் என்ற புனைபெயரோடு ஒரு புலவர் இந்நூலைச் செய்திருக்கலாம். இந்நூலிலுள்ள குடியேற்றப் பகுதியை மயில்வாகனப் புலவர் அவ்வாறே படியெடுத்துத் தமது யாழ்ப்பாண வைபவ மாலையிற் கூறியயபடியால் அந்நூல் ஆராயப்படும் போது இந்நூலையும் சேர்த்துப் பின்னர் ஆராயப் படும். இதற்கிடையில் தமிழரசர் ஆட்சி கி. பி. 1620 இல் முடிவடைந்து போகப் போத்துக்கேயர் ஆட்சி கி. பி. 1621 இல் தொடங்கியது. இனிப் போத்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் சாதிகளுக்கிடையில் ஏற்பட்ட மாற்றங்களைப்பற்றி ஆராய்வாம்.

## 19. போத்துக்கேயர் காலம் (1621 — 1658)

போத்துக்கேயர் ஆட்சிக்கு வந்தபோது அவர்களது மதக்கொள்கைகளும், ஆட்சிமுறைகளும், நாகரிகமும் சாதிக் கட்டுப்பாட்டைச் சிதறச்செய்தன (2). "எவருக்கும் கிறிஸ்துமதம் அநுட்டித்தாலன்றி அதிகாரத் தலைமை உத்தியோகங்கள் கிடையா" என்று அவர்கள் கட்டளை பிறப்பித்தபோது மக்கள் உள்ளுக்குச் சைவராகவும், வெளித் தோற்றத்திற் கிறீஸ்தவராகவும் நடித்து உத்தியோகங்களைப் பெற்

1. கைலாயமாலை, நூலாசிரியர் விபரம், முகப்பு, பக். 4.
2. "Many foreign influences have broken up the caste system", "The Ceylon Historical Journal."

றனர். போத்துக்கேயர் சாதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தினதின் விளைவாகச் சாதிகளில் பல மாற்றங்கள் எற்பட்டன (1). காணிகளைப்பற்றிய விபரங்கள் அடங்கிய ஏடுகள் (தோம்புகள்) முதல்முதல் கி. பி. 1623இல் எழுதப்பட்டபோது உயர்ந்த உத்தியோகங்களிலிருந்த பாணர், மழவர் முதலியோர் அவற்றில் தங்களை வேளாளர் என்று பதிந்து கொண்டனர். அவர்களைப் பின்பற்றி மற்றச் சாதிகளும் தங்கள் சாதிப்பட்டத்தை மறைத்து வேளாளர் என்று பதிந்து கொண்டனர். அரசாங்க ஏடுகளில் வேளாளர் என்று பதியப்பட்டது இதுவே முதன்முறையாகும். பெருந்தொகையான மக்கள் தங்களை வேளாளர் என்று பதிய முன்வருவதை உத்தேசித்து அரசினர் வேளாளர் சாதிப்பட்டப் பெயராகிய முதலிப் பட்டத்தை 18 இறைசாலுக்கு விற்கத்தொடங்கினர். பெருந்தொகையான மக்கள் அப்பட்டத்தை விலைக்கு வாங்கி தம்மை வேளாளராக்கிக் கொண்டனர். இதன் விளைவாகக் கி. பி. 1690 இல் 10170 ஆக இருந்த வேளாளர் சனத்தொகை கி. பி. 1796 இல் 15796 ஆக உயர்ந்தது. இவ்விதச் சாதிமாறல்களால் தாழ்ந்தசாதிகள் சிலவற்றைத்தவிர மற்றைய இடைச் சாதிகள் பல மறைந்து போயின. இதற்கிடையில் போத்துக்கேயர் ஆட்சிக்காலம் கி. பி. 1657 இல் முடிவடைந்தது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் கி. பி. 1658 இல் தொடங்கியது.

## 20. ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் (1658 — 1795)

ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் கி. பி. 1658 இல் தொடங்கியபோது 'றிக் லொப் வான் கூன்ஸ்' என்னும் தளபதியின் கட்டளைக்கிணங்க (31-10-1658)

3. "The Portuguese completely ingnored caste", Horace Perera, "Ceylon under Western Rule" p. 34.

வேளாளருக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. வேளாளர் அரசினருக்குப் பணியாமல் கர்வங்கொண்டு கலகம் விளைத்தனர். இதனுல் வேளாளருடைய செல்வாக்குக் குறைந்தது. இது தக்கசமயம் எனக்கருதி தாமும் வேளாளருக்குச் சமம் (1) என்றும், தமக்கும் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் மடப்பளியார் வாதாடினர். அதன் பலனுக 1694 ம் ஆண்டு உத்தியோகங்கள் எல்லாச் சாதிகளுக்கும் கொடுக்கப்பட்ட போது வேளாளர் திரும்பவும் கலகஞ் செய்தனர். இக்கலகந்தின் பின்னர் மடப்பளியாரின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. மடப்பளி அதிகாரிகள் தமது சாதிப்பட்டமாகிய மடப்பம் என்னும் பெயரை தோம்பில் பதியத் தொடங்கினர். அவர்களைப் பின்பற்றி எல்லாரும் பதியத் தொடங்கினர். அரசினர் வருமானத்தை நோக்கி அப்பட்டத்தை 100 இறைசாலுக்கு விற்றனர். பெருந்தொகையான மக்கள் அப்பட்டத்தை வாங்கினர். மடப்பளியாரின் சனத்தொகை 5520 ஆக உயர்ந்தது. மீன்குத்தகையை வேளாளர் வாங்க மறுத்தபடியால் கரையாருக்கும் வேளாளருக்குரிய முதலிப் பட்டம் கொடுக்கப்பட்டது. மடப்பளியாரும் (3) கரையாரும் வேளாளரோடு உத்தியோகப் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டபடியால் வேளாளருடைய செல்வாக்கு அதிகம் பாதிக்கப்பட்டது. வேளாளர் தமது செல்வாக்கை உயர்த்த எண்ணித் தாம் விசேட அழைப்பின்பேரில்

---

1. " Madappalis———consider themselves equal to vellalas', Zwardecroon, Dutch commander of Jaffna (1697 . Memoir p. 21.
2. " Vellatas joined by vannias revolted and. organzed riots ' Zwadecroon's Memoir p. 114
3. ' படப்பள்ளியாருக்கு முதலிப்பட்டங் கொடுத்து வேளாளர் ஆக்கப்பட்டனர் " யா. சரி. பக். 117.

குடியேற்றப்பட்ட உயர்குடித் தொண்டை மண்டல வேளாளர் என்னும் தகுதியைத் தாபிக்க இடைவிடாது மேலும் முயன்றனர். அந்த முயற்சியின் பயபயனுகக் கடைசியாகத் தோற்றிய நூலே யாழ்ப்பாண வைபவ மாலையாகும்.

## 21. யாழ்ப்பாண வைபவமாலை

யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல் மாதகல் மயில்வாகனப் புலவரால் கி. பி. 1736ம் ஆண்டு இயற்றப்பட்டது. இதில் கூறப்படும் குடியேற்றப்பகுதி பெரும்பாலும் கைலாயமாலையிற் கூறப்பட்ட குடியேற்றத்தைப் படியெடுத் தெழுதப்பட்டது. இதன்கண் கூறப்பட்ட குடியேற்றம் வருமாறு :-

'கூழங்கைச் சக்கரவர்த்தி முடிசூட்டப்பெற்று வாழ்ந்திருக்கும் காலத்தில் ஓர் நாள் புவனேகவாகு என்னும் தன் மந்திரியோடு ஆலோசித்துச் சில குடிகளை இவ்விடம் அனுப்பி வைக்குமாறு தமிழ்நாட்டரசர்களுக்குத் திருமுகங்கள் எழுதி அனுப்பினுன். அவ்வரசர்கள் இருபத்தேழு குடிகளை அனுப்பிவைக்க, அவர்கள் வந்து சேர்ந்தார்கள். வந்து சேர்ந்த பிரபுக்கள் அவரவர் அடிமை குடிமைகளோடு யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் குடியிருத்தப்பட்டனர்'.

மேலே கூறப்பட்டவருள் மழவர், தேவர், செட்டி, உடையார், பாணர் என்னும் ஐந்து சாதிகளைச் சேர்ந்த பதினைந்துபேர் வேளாளர் என்னும் முகவரியோடு அனுப்பப்பட்டனர் என்று நூலிற் கூறப்பட்டுள்ளது. அவர்கள் வேளாளன் பாண்டிமழவன், வேளாளன் செண்பகமழவன் முதலிய மழவர்கள் ஒன்பதின்மர், வேளாளன் நரசிங்கதேவன், வேளாளன் நரங்குதேவன் (1) என்னும் தேவர்கள் இருவர்,

1. கைலாயமாலை, வரி, 186.

வேளாளன் கனகராயன் செட்டி ஒருவன், வேளாளன் செண்பக மாப்பாணன், வேளாளன் சந்திரசேகர மாப்பாணன் என்னும் பாணர் இருவர், வேளாளன் பேராயிரமுடையான் ஒருவன் என்னும் பதினைவராவர்.

கள்ளர் (1) சாதியைச் சார்ந்த அம்பலக்காரனாகிய மழவனையும், தூண்டில் மீன் பிடித்தல் (2), மண்டையோட்டைக் கையிலேந்திப் பிச்சை எடுத்தல் (3), தையல்வேலை செய்தல் (4), நகரின் புறத்தே 'மீன் சீவும் சேரியில்' வசித்தல் (5), ஆத்தின்னல் (6), புலைத்தொழில் செய்தல் (7), முதலிய தொழில்களை உடைய பாணனையும், கொலை, களவு, கொள்ளை என்னும் மறத் தொழிலைச் செய்யும் தேவர் என்னும் பட்டப்பெயர் பெற்ற மறவரையும், கொங்கு நாட்டு வேடுவ குலத்தைச் சார்ந்த உடையானையும், வணிகர் வகுப்பைச் சார்ந்த செட்டியையும், சாதி மரபுக்கும் தேச வழமைக்கும் முழுமாறாக வேளாளர் என்று முகவரி கொடுத்து இரட்டைச் சாதிகளாக்கி தமிழ் நாட்டரசர்கள் அவர்களை இங்கு அனுப்பினார்கள் என்று வைபவமாலையாசிரியர் கூறியது ஒரு சிறிதும்

---

1 " Kallas, maravas and agambadias are responcible for 42% of the crime in south Indio " Report oi the Inspector General of Police for the year 1897

2. 'தூண்டில் மீன் நடுங்கும் பொதுவிரை கௌவிய' பெரு. பா. ஆற்றுப்படை, வரி. 252-57

3. 'பாணர் மண்டை நிறையப் பெய்மார்' புறப்பாட்டு, 115.

4. 'சதுர்முகப் பாணர் தைக்குஞ் சட்டை', பட்டினத்தடிகள், கோயில் திரு அகவல் வரி 67.

5. 'மின்சீவுஞ் சேரியோடு மருதஞ் சான்ற தண்பணை சுற்றி' பெரு. பா. ஆற்றுப்படை, வரி, 267-20.

6. 'ஆத்தின்னி போந்த தருவே', திருக்கோவையார், பா, 95

7. 'பிரியாக் கவிதைப் புலையன் தன் யாழின்', கலித்தொகை பா. 95.

பொருந்தாது. சாதிமாறல் செய்து அவர்களை இரட்டைச் சாதியினர் ஆக்கும் வழக்கம் தமிழ்நாட்டில் இல்லையாதலால் அக்குடியேற்றம் ஒருபோதும் நடந்திருக்காது.

வேளாளருக்குரிய பட்டப்பெயரில்லாமற் குடியேறியவர்கள் வருமாறு :-

வேளாளன் நீலகண்டன் முதலிய நால்வர், வேளாளன் கூபகாரேந்திரன், வேளாளன் தேவராசேந்திரன், பல்லவன் என்னும் வேளாளன், பிரபுக்கள் இருவர் என்னும் ஒன்பதின்மராவர்.

மேலே கூறப்பட்ட சாதிப் பட்டப்பெயரில்லாதவர்கள் வேளாளர்களாவதற்குத் தங்கள் சாதிப்பட்டத்தை மறைத்துவிட்டனர் என்று எண்ண இடமுண்டு. அவர்களுக்கும் வேளாளர் என்னும் முகவரி சேர்க்கப்பட்டுள்ளது. அவர்கள் வேளாளராக இருந்தால் தங்கள் பெயர்களின் இறுதியில் பிள்ளை அல்லது முதலி என்னும் சாதிப் பட்டங்களைச் சேர்த்திருப்பர்.

குடியேறினவருள் இருவர் சாதிப்பட்டத்தோடு கூடிய வேளாளராவர் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் மண்ணாடு கொண்ட முதலியும், தனிநாயக முதலியுமாவர். இவருள் மண்ணாடு கொண்ட முதலி தொண்டை மண்டலத்துள்ள மண்ணாட்டின் சிற்றரசனாயிருக்கலாம். அவர்கள் தமது அரசியற் கடமைகளையும் சமூகக் கடமைகளையும் உதறித்தள்ளிவிட்டுத் தாழ்ந்த குலத்தினரோடு கூடி இங்குவந்தார்கள் என்று எண்ணுதற்கு இடமில்லை.

வேளாளர் இங்கு வந்து குடியேறாததற்குப் பல காரணங்கள் உள! அவற்றைப்பற்றி ஆராய்வாம். வேளாளர் பதினென் குலமக்களுக்குத் தலைமை தாங்குவோர் என்றும், சாந்தம், பொறை முதலிய

பத்துக்குணங்களை உடையவர் என்றும் (1) உழவுத் தொழில் செய்து உலகைக் காப்பவர் என்றும் (2), வேளாளர் புராணம், பசும்மை எழுபது, மாபாள சூழாமணி, ஏரெழுபது, திருக்கை விளக்கம், தொல் காப்பியம், தேவாரம், திருவந்தாதி, மேழிவிளக்கம் (3), காணி நூல், கொங்குமண்டல சதகம், புறநா னூறு, மேழி எழுபது முதலிய நூல்கள் புகழ்ந்து கூறுகின்றன. அவர்கள் அரசன் ஆணைப்படி ஓதல், ஈதல், பசுக்காத்தல், பயிரிடல், பொருளீட்டல், வேட் டல் என்னும் அறுதொழில்களைச் செய்யுங்கடப்பாடு டையர் (4). இக்காரணம் பற்றி அவர்களுக்குப் படைத் தொழில் விலக்கப்பட்டது என்று கிரேக்க சரித்திரா சிரியராகிய மெகஸ்தெனிஸ் கூறுகின்றார் (5). அவர் கள் தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதில் முழுநேரத்தையும் போக்குகிறபடியால் பட்டணத்துக் குத் தானும் போவதில்லை என்பதைச் சிலப்பதிகா ரத்தால் அறியலாம் (6). மெகஸ்தெனிசும் இவ்வுண் மையை எடுத்து விளக்கியிருக்கிறார் (7). முற்காலத் தரசர்கள் காடு வெட்டி நாடாக்கியும், குளம் தோண்டி வளம் பெருக்கியும், ஆறிலொரு பங்கு வாங்கி வேளாளரைப் பாதுகாத்தனர் என்பதைத்

---

1. சூடாமணி நிகண்டு, தொகுதி, 12, பா. 109.
2. ‘வேளாண் மாந்தருக்கு உழுதூண் அல்லது இல்லெனமொழிப பிறவகை நிகழ்ச்சி’ தொல். மரபியல், சூத். 80.
3. ‘வேளா மரசே மிக வரசு’ பா. 162.
4. சூ. நிகண்டு, தொ. 12, பா. 56.
5. Megasthenes ‘The husbandmen are gentle and mild and are freed from military service.’ Vincent Smith, Early History of India, p. 610.
6. சிலப்பதிகாரம், மங்கள வாழ்த்து, வரி. 15.
7. Megasthenes. “The husbandman never goes to town to take part in the tumult or for any other purpose” Vincent Smith, Early History of India, p. 610.

தென்னாட்டுக் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம் (1). இத்தகைய பெருஞ் சிறப்புக்களோடும், பாதுகாப்போடும் பரிபாலிக்கப்பட்ட வேளாண் பெருமக்கள் நீர்வளம், நிலவளம் மிக்க தமது பொன்கொழிக்கும் நாட்டைவிட்டு நீர்வளம், நிலவளமற்ற வரண்ட நாடாகிய யாழ்ப்பாணத்துக்குக் கடல்கடந்து இராக்கத பயம் நிறைந்த அந்தக்காலத்தில் வந்தார்கள் என்பது ஒருபோதும் நிகழக்கூடிய காரியமன்று: இராசநாயக முதலியாரும் இக்கருத்துடையர் என்பதை அவருடைய சரித்திர நூலால் அறியலாம் (2).

அது வருமாறு :- "அவ் வேளாண் மக்கள் பொன்கொழிக்கும் யாற்றுவளம் நிரம்பிய தங்கள் தேசங்களைவிட்டு வேளாண் மக்களுக்குரிய வளனற்ற நிலப்பாங்கினை உடைய இந்நாட்டிற்கு வருதற்கேற்ற இன்றியமையாத காரணம்தான் என்னையோ? பஞ்சமா? அன்றி அந்நாட்டிலும் இந்நாடு கவரத்தக்கதா"

குடியேற்றம் கற்பனை என்பதை நிரூபிக்கப் பாண்டி மழவனின் குடியேற்றம் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. "யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமழவன் கொண்டு வந்த வேளாண் குடிகளுள் பின்னுமொரு பாண்டி மழவன் இருப்பதைக் கண்ட இராசநாயக முதலியார் "பாண்டிமழவன் சென்று குடிகளைக் கொண்டு வந்தான்" எனக் கூறுங் கூற்று "ஆகாய கங்கையில் மலர்ந்த தாமரையோடொக்கும் என்கிறார்" (3).

---

1. வி. ரா. ரூருசாமிதேசிகர், 'தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுகள்', No. 15 மணிமங்கலம் சபையோர் சாசனம், பக். 88, வரி, 16. 'ஆறிலொன்று அவனியில் கூறுகொள் பொருள்களும்'.
2. யாழ்ப்பாணச் சரித்திரம், பக். 238.
3. யாழ்ப்பாணச் சரித்திரம், பக். 239.

"குடியேறிய பிரபுக்கள் அவரவர் அடிமை குடிமைகளுடன் வந்தனர்" என்று நூலிற் கூறப்பட்டது. இது உண்மைக்கு மாறானது. அடிமை குடிமை வழக்கம் யாழ்ப்பாணத்தில் உள்ளதேயன்றி இந்தியாவில் இல்லை என்பதற்கு மெகஸ்தெனிஸ் (1), வின்சென்ற் சிமித் (2) கௌடில்லியர் (3) என்போர் சான்று பகர்கிறார்கள்.

மயில்வாகனப் புலவருடைய யாழ்ப்பாண வைபவமாலை மகா முதலிமாருடைய பேருதவியோடு அக்காலத்திலிருந்த தேசாதிபதி பீற்றர் மக்காரே (*Pieter Macara*) என்பவருடைய ஆசீர்வாதம் பெற்று அரங்கேறியது. மகாமுதலிமார் அக்காலத்தில் பெருஞ் செல்வாக்குள்ளவராக இருந்தனர் (4). பீற்றர் மக்காரே என்பவர் 'பிசுக்கால்' அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் இருந்தார் என்பது வ. குமாரசுவாமி அவர்களின் கருத்தாகும் (5). தமிழருடைய சமயாசாரத்தையும் குலாசாரத்தையும் வேரோடு அழிக்கக் கங்கணங்கட்டிய அந்நிய தேசத்தவனாகிய மக்காரே என்பவன் தமிழருடைய சரித்திரத்தை எழுதுவிப்பதில் ஆசைகொண்டான் என்பது நம்பமுடியாததொன்றாகும்.

---

1. Megasthenes. 'It is good thing that Indians were free and no slave existed in India'.
2. Vincent Smith, Early History of India, p. 459., 'Slavery is said to be unknown in India'.
3. Kaudilia Arthasastra, Book III. chap. 13, 14. "Na tu Aryasia dasa bah vah" Trans "The Aryans could not be in a state of slavery'.
4. "The mudaliars were powerful in the country. The mudaliars constituted an imperium in inperio (Government within a government)", L. H. Horace Perera, Ceylon Under Western rule, p. 150 - 151.
5. V. Kumaraswamy B. A. 'A peep into the Dutch Archives in Ceylon' 'Hindu Organ, of 3-12-36.

## 22. யாழ்ப்பாண வைபவமாலையும் சரித்திராசிரியர்களும்

வைபவ மாலையை ஆராய்ந்த சரித்திராசிரியர்கள் அந்நூலைப் பலவாறு கண்டித்துள்ளார்கள். அவற்றுட் சிலவற்றைக் கீழே தருகிறோம். சு. நடேசபிள்ளை (பரமேஸ்வரக் கல்லூரி அதிபர்) "இதிலுள்ள வரலாறுகள் யாவும் சரித்திர உண்மைகள் என்று கொள்வதற்கில்லை" என்று கூறுகிறார் (1). "இவர் சிறந்த புலவரன்றிச் சரித்திராசிரியர் அல்லர். இந் நூலில் தலைதடுமாற்றமான கூற்றுக்களைப் புகுத்திவிட்டார்." என்பது குல. சபாநாதன் கருத்தாகும் (2). வித்தியாதரிசி தி. சதாசிவஐயர் "ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்கும்போது ஒவ்வாதன பல இதன்கண் இடம்பெறலாயின" என்று கூறியுள்ளார் (3). வையாபாடற் பதிப்பாசிரியர் J. W. அருட்பிரகாசம் பின்வருமாறு அபிப்பிராயம் தந்துள்ளார். "இவ் வைபவமாலை... முற்றாக நம்பப்படத்தக்கதன்று"(4). சுவாமி ஞானப்பிரகாசருடைய அபிப்பிராயம் பின்வருமாறு:- "கயிலாயமாலை, வைபவமாலையிற் கூட்டுற்ற விபரங்கள் எல்லாம் ஊர்க் கதைகளையும், மனோபாவனைகளையும் ஒன்றோடொன்று கால எல்லை முரணவைத்த கோவையாகும்"(5) இராசநாயக முதலியார், க. வேலுப்பிள்ளை முதலியோரும் தமது சரித்திர நூல்களில் இந்நூற் கொள்கைகளைக் கண்டித்திருக்கிறார்கள்.

---

1. யா. வை. மாலை, குலசபாநாதன் பதிப்பு, முகவுரை.
2. யா. வை. மாலை, குலசபாநாதன் பதிப்பு, ஆராய்ச்சி.
3. இந்துசாதனம், 17-7-49
4. வையாபாடல் (1921), நூன்முகம், பக். 5.
5. யா. வை. மாலை விமர்சனம், பக். 57.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தமது யாழ்ப்பாணச் சரித்திர நூலில் மயில்வாகனப் புலவருடைய சாதி மாறல் கொள்கையை ஆதரித்து ராயன், தேவன், மழவன் என்னும் சிறப்புப் பெயர்கள் அந்நாள் வேளாளரைக் குறிக்கும் என்று கூறியதற்கு ஓர் ஆதாரமும் கிடையாது (1).

இனி அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் K. K. பிள்ளை அவர்கள் தமது 'தென்னிந்தியாவும் இலங்கையும் என்ற நூலில் யாழ்ப்பாணக் குடியேற்றத்தைப்பற்றிக் கூறிய சில மாறுபாடான கொள்கைகளைப் பற்றி ஆராய்வாம். நூலின் 117ம் பக்கத்தில் 'பாண்டிமழவன் ஒரு வேளாளத் தலைவன்' என்று கூறியுள்ளார் (2). மழவன் என்னும் சாதிப் பட்டப்பெயர் அம்பலக்காரருக்குரியதேயன்றி வேளாருக்குரியதன்று. ஆகையால் அம்பலக்காரனை வேளாளன் என்று கூறுவது இரட்டைச் சாதியை உண்டாக்குவதாக முடியும். இப்பிழை வைபவ மாலையைப் பின்பற்றி எழுதினபடியால் ஏற்பட்டது. அதே பக்கத்தில் விஜயநகர அரசின்கீழ் வேலைநீக்கம் பெற்ற வேளாளர் இலங்கைக்கு வந்தனர் என்று கூறப்பட்டுள்ளது (3). இதற்குத்தக்க ஆதாரம் இலங்கைச் சரித்திரத்திலாவது இந்திய சரித்திரத்திலாவது கிடையாது. வேறு நாட்டுக்குப்போய்க் குடியேறுவதற்கு வேலைநீக்கம் போதிய காரணமாகாது. 148ம் பக்கத்தில் "குடியேறியவர்களின் பெயர்களிலிருந்து அவர்கள் பாண்டிநாட்டு வேளாளர் என்று அறிய

1. யாழ். சரி., பக். 13.
2. K. K. Pillai, South India and Ceylon p. 117. 'Pandimalavan who is a Vellala chieftain——'
3. K. K. Pillai, South India and Ceylon, p. 117. 'Many vellalas left their hearths and homes in South India and proceeded to settle down in Ceylon'

லாம்" என்று கூறியுள்ளார். பாண்டிநாட்டு வேளாளர் நெடுங்குடி வேளாளர், சிறுகுடிவேளாளர், அகமுடைவேளாளர், நீறுபூசும் வேளாளர், கார்காத்த வேளாளர் என்னும் ஐவகைப்படுவர். குடியேற்றக்காரர்களில் ஒருவர்தானும் மேலே கூறப்பட்ட உபபிரிவுகளில் ஒன்றைச் சார்ந்தவரென்று கூறப்படவில்லை. பாண்டிநாட்டு வேளாளரின் சாதிப்பட்டபெயராகிய 'பிள்ளை' என்னும் பட்டத்தையாவது குடியேற்றக்காரர் தங்கள் பெயரோடு கூட்டிக்கொள்ளவுமில்லை. இப்படி இருக்கும்போது பெயர்களிலிருந்து அவர்கள் பாண்டிநாட்டு வேளாளர் என்று கூறமுடியாது. 148ம் பக்கத்தில் பிள்ளையவர்களின் ஆராய்ச்சிப்படி இந்திய வேளாளரிடத்தில் இயல்பாகக் காணப்பட்ட நேர்மை, உபசாரம், விசுவாசம் என்னும் சிறந்த குணங்கள் அவர்கள் யாழ்ப்பாணத்திற் குடியேறிய பின்னர் அவர்களைவிட்டு நீங்குகின்றன என்கிறார் (1). இக்குணங்கள் அவர்களை விட்டு நீங்குவதற்குரிய காரணங்கள் கூறப்படவில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறப் புறப்படும்போது அக்குணங்களை விட்டு வந்தார்களோ? என்று எண்ணவேண்டியிருக்கிறது.

மேலே கூறப்பட்ட காரணங்களால் வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூல்களிற் கூறப்பட்ட குடியேற்றம் கற்பனைக் குடியேற்றம் என்பதும், இங்கே உயர்பதவிகளில் பெருஞ்செல்வாக்கோடு விளங்கிய பாணர், தேவர், மழவர், உடையார் முதலியோருக்கு உயர் குடிப்பிறப்புக் கூறியதும் கற்பனையின்பாற்படும் என்பதும் புலனாகும்.

---

1. Same book p. 148. 'It is too much to suppose these traits of honesty, hospitality and piety of the Vellala community of South India were shared by the counter parts in Jaffna'.

## 23. புதுச் சாதிகள்

தமிழ் நாட்டிலிருந்தும், சேர நாட்டிலிருந்தும் வந்து குடியேறிய அறுபத்திரண்டு சாதிகளுள் இருபத்தொரு சாதிகள் தவிர மற்றையன எல்லாம் வேற்றரசர் காலத்திலும் முன்னும் மறைந்துவிட்டன. மறைந்த சாதிகளுக்குப் பதிலாகச் சில புதுச்சாதிகள் தோன்றின. அவற்றுள் முக்கியமானவை மடப்பளி, கோவியர், நழவர் என்பன. அவற்றைப்பற்றி ஆராய்வாம்.

### மடைப்பள்ளி

மடைப்பள்ளி என்னும் சாதி வேளாளருக்குப் போட்டியாகப் பரநிருபசிங்கன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இச் சாதியார் முதலிற்றமிழரசர் காலத்தில் பிராமணருடைய சமையற்கூடத்தில் உதவியாளராக இருந்தனர் என்று ஒல்லாந்த தேசாதிபதியாகிய தொமாஸ் வான் றி என்பவர் கூறியுள்ளார் (1). பின்னர் அவர்கள் அரசகுடும்பங்களுக்குச் சமையல் செய்தனர் (2). பரநிருபசிங்கன் காலத்தில் அவர்களுள் இராச விசுவாசமுள்ளவர்களைத் தெரிந்தெடுத்து இராச மடைப்பள்ளி, குமார மடைப்பள்ளி, சங்கு மடைப்பள்ளி (சங்கமடைப்பள்ளி), சருகு மடைப்பள்ளி, (சர்வ மடைப்பள்ளி) என்னும் பட்டங்கள் கொடுத்து நான்கு பிரிவுகளாகப் பிரித்து மடைப்பள்ளி அதிகாரிகளாக்கப்பட்டனர். இராச மடைப்பள்ளியாரும், குமார மடைப்பள்ளியாரும் பரநிருபசிங்கனுக்கும் அவன் மகன் பரராசசிங்கனுக்கும் உறுதிச் சுற்றத்தினராக விளங்கினர். இராசமடைப்பள்ளி

1. Thomas Van Rhee, Governor of Ceylon (1692—97), 'In heathen times they were employed to assist in the kitchen of the Brahmins.'

2. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, யாழ். சரி. பக். 61.

யார் இராசாக்களுக்கு அந்தப்புர மகளிர்பாற் பிறந்த பிள்ளைகள் என்று காசிச் செட்டியும், டாக்ரர் சிவ தினமும் கூறியுள்ளார்கள். இக்கருத்தைச் "சிலோன் கசற்றர்" என்னும் பத்திரிகையும் ஆதரித்துள்ளது (1).

வேளாளருக்குப் போட்டியாக மடைப்பள்ளியா ருக்கு கிராமாதிகார உத்தியோகம் கொடுக்கப்பட்ட போது அவர்களுக்கு வடதிசை வேளாளருக்குரிய முதலிப்பட்டம் கொடுத்து வேளாளராக்கப்பட்டனர். உத்தியோகம் உயர்வடையும்போது குலமும் உயர் வடைகிறது என்பது எம். டி. இராகவன், வி. ரங் காசாரி என்போர் கருத்தாகும் (2). சாதிமாறல் நிகழ்ந்தபோது சாதிப்பெயராகிய மடைப்பள்ளி என்ற சொல்லும் மடப்பளியாக மாற்றம் அடைந் தது. அது மடப்பம் — ஐஞ்ஞூறு கிராமம், அளி — காத்தல் என்னும் புதுப்பொருளையும் பெற்றது. மடப் பளியார் வேளாளராக்கப்பட்டபின் இருபகுதியாருக் குமிடையில் தீராப்பகை ஏற்பட்டது (3). ஒல்லாந் தர் ஆட்சி தொடங்கியபோது மடப்பளியாரிலும் கூடின உத்தியோகங்கள் வேளாளருக்குக் கொடுக்கப் பட்டன. மடப்பளியார் தாம் வேளாளருக்குச் சமம் என்று வாதாடி 1694இல் சகல உரிமைகளையும் பெற் றனர் (4). மடப்பளியாருக்கு உயர் உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டதை மறுத்து வேளாளர் கலகம் விளைத்தனர்.

1. Ceylon Gazetter, p. 239.
2. V. Rangachary Vedic India, p. 534. "Old castes demand new ranks". M. D. Ragavan, Ethnological Survey of Ceylon, p. 103.
3. "Madappallis were appointed to counter the influence of the velalas," Zwardecroon, Dutch commander in Jaffna, Memoir, p. 24.
4 38ம் பக்கம், மூன்றும் இலக்க அடிக்குறிப்பைப் பார்க்க வும்.

கலகங்கள் காரணமாக வேளாளர் அரசியற் செல்வாக்கை இழந்தனர். மடப்பளியாரின் செல்வாக்கு மிக உயர்ந்தது. அவர்களுடைய செல்வாக்கு அடுத்த நூறு வருடங்களுக்கு மேலோங்கியது. மடப்பளி என்னும் சாதி இந்தியாவில் இல்லாத காரணத்தால் மடப்பளியாருடைய செல்வாக்கு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற் குறையத் தொடங்கியது. 1834ம் ஆண்டில் விநாயகர் கந்தரை, விநாயகர் முருகர் 'மடைப்பள்ளியான்' என்று ஏசியதற்காக வைக்கப் பட்ட வழக்கில் நீதவான் கொடுத்த தீர்ப்பும், மடப்பளியாரின் சாதிப்பெருமையை மிகவும் பாதித்தது(1). இதன் பின்னர் மடப்பளியார் செல்வாக்கு நாளடைவில் குறைந்தது. இது சம்பந்தமாகச் சுவாமி ஞானப்பிரகாசர் பின்வருமாறு கூறியுள்ளார் "மடப்பளியார் செல்வாக்கு" உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறுய் ......... உழவர் தாமும் மடப்பளியாரைத் தாழ்த்திப் பேசவும் தலைப்பட்டனர்."

மடப்பளியார் சுத்தமான தமிழரன்றிக் கலிங்க நாட்டிலிருந்து வந்த தெலுங்குச் சாதியைச் சார்ந்தவர் அல்லர். மடப்பளியார் எப்போதாவது தெலுங்குப் பாஷை பேசினர் என்பதைச் சரித்திரத்தில் காணேும். சுவாமி ஞானப்பிரகாசர் கலிங்கநாட்டின் நத்தவாடிப் பிரிவிலுள்ள ஊராகிய மடப்பளி என்னுமூரிலிருந்து வந்த கலிங்க தேசத்தவர் என்று மடப்பளியாரைக் கூறுவது சற்றும் பொருந்தாது (2).

### கோவியர்

கோவியர் என்னும் சாதியும் புதிதாகத் தோன்றிய சாதிகளில் ஒன்றுகும். கோவியர் என்னும்

1. A. F. Muthukrishna, 'Desavalame', p. 669.
2. சுவாமி ஞானப்பிரகாசர், 'யாழ். வை. விமர்சனம்' பக். 148.

சொல்லின் பொருள் சரியாக விளங்கவில்லை. கோயிலார் என்னும் சொல் திரிந்து கோவிலார், கோவியர் என்று வந்ததென்பது மோகன் கந்தவாலா என்பவர் கருத்து. போத்துக்கேயர் காலத்தில் கோயில்களில் தொண்டு செய்தவர்கள் கோயில்கள் இடிபட்டபோது வேலையில்லாமற் போனதால் வறுமை காரணமாகத் தம்மை விற்று அடிமைகளாக்கினர் என்று கூறப்பட்டுள்ளது. சங்கிலி சிங்களவரை நாட்டைவிட்டுத் துரத்தியபோது நாட்டைவிட்டு வெளியேற முடியாது தங்கினவர் தமிழ்த் தலைவர்களுக்கு அடிமைகளாக இருக்க உடன்பட்டனர் என்பது இராசநாயக முதலியார் கருத்து. கொவியர் ( Govias ) என்னும் சிங்களச் சொல்லே கோவியர் என மருவி வந்ததென்பதும் அவர் கருத்தாகும். வேளாளருக்கும் கோவியருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள. கோவியர் மணவினைக் காலங்களில் வேளாளர் அவர்கள் வீட்டில் உணவுண்ணும் வழக்கம் உள்ளது. இரு சாதியாருக்கும் மண்வெட்டி, குத்துவிளக்கு, அறுகால் என்பன பொதுவான மாட்டுக் குறிகளாகும்.

## நழவர்

ஈழவர் என்னும் மரமேறுஞ் சாதியார் மலையாளத்திலிருந்து இங்கே வந்தபோது அவர்கள் நழவர் என்று அழைக்கப்பட்டனர். ஈழவர் என்னும் சொல்லின் முதலெழுத்தாகிய ஈ, ந என்னும் எழுத்தாக மாற்றம் அடைந்ததே நழவர் என்னும் பெயர் உண்டானதற்குக் காரணமாகும். குடியேற்றத்தில் மரமேறும் சாதியார் வராமையினுல் உயர்சாதி மக்கள் அவ்வேலையைச் செய்து நாளடைவில் உயர் சாதியினின்றும் நழுவியமை காரணமாக நழவர் எனப்பட்டனர் என்றும் கூறுவர். இச்சாதியின் தோற்றம் வேறும் பல வகையாகவும் கூறப்படும்.

## 24. சாதிமாறல்

### வண்ணார், அம்பட்டர், பறையர்

தமிழ்நாட்டில் வண்ணார் கோயிலுக்குட் பிரவேசிப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் அவர்கள் கோயிலுக்குள் போகிறார்கள். இதிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து வண்ணார் குடியேறவில்லை என ஊகிக்கவேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் அம்பட்டர் கோயிலுட் பிரவேசிக்கலாம். யாழ்ப்பாணத்தில் அவர்கள் கோயிலுக்குள் போவதில்லை. இதனால் தமிழ்நாட்டு அம்பட்டர் வந்து குடியேறவில்லை என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

மேலே கூறப்பட்ட இரு சாதிகளும் குடியேறா விட்டால் இங்கேயுள்ள இரு சாதிகளும் எக்குலத்தைச் சார்ந்தவர்கள் என்ற கேள்வி எழும். இது விஷயம் மேலும் ஆராயப்பட வேண்டியதொன்று.

வண்ணார், அம்பட்டர், பறையர் என்னும் மூன்று சாதிகளுக்குரிய பெண்கள் சமுதாயத்தில் மற்றைய இடைச்சாதிப் பெண்களிலும் பார்க்க விசேட தகுதியைப் பெற்றிருக்கிறார்கள். எல்லாச் சாதி மக்களும் அவர்களை மரியாதையோடு நடத்துகிறார்கள். குடியேற்றத்தில் இந்த மூன்று சாதிப்பெண்களுக்கு விசேட மரியாதை செய்யப்படுவதற்குரிய காரணம் என்ன என்று ஆராய வேண்டும். மேலே கூறப்பட்ட சாதிகளுக்குரிய பெண்கள் குடியேற்றத்தில் வராதிருந்தமையால் உயர்குடிப் பெண்களை அச்சாதியாருக்குக் கலியாணம் செய்து கொடுத்திருக்க வேண்டுமென்று ஊகிக்க இடமுண்டு.

# பிற்சேர்க்கை

## 1. முக்கிய நிகழ்ச்சிகளின் கால அட்டவணை

| கி. மு. | |
|---|---|
| 12000 | லெமூரியாக் கண்டம் (குமரிக் கண்டம்) கடலில் மூழ்குதல். |
| 3102 | கலியுகத் தொடக்கம். |
| 3000—2500 | சிந்துவெளி நாகரிகம். |
| 2500 | நாகர்களின் வடஇந்திய ஆதிக்கம். |
| 2000—1500 | வேதகாலம், ஆரியர் இந்தியாவுக்குள் புகுதல். |
| 2000 | இராமாயண காலம். |
| 1800 | பாரத காலம். |
| 800—550 | முதற்சங்க காலம். |
| 700 | ஆரியர் தென்னாடு புகுதல் |
| 600 | நாகர்களின் நாகதீப ஆட்சி. |
| 563—483 | புத்தன் காலம். |
| 550—250 | இடைச்சங்க காலம். |
| 547—477 | மகாவீரன் காலம். |
| 500 | லம்பகர்ணர் குடியேற்றம். |
| 483 | விஜயன் இலங்கைக்கு வருதல். |
| 306 | தமிழ்நாட்டில் சமண சமயம் பரவுதல். |
| 272—263 | தமிழ்நாட்டில் பௌத்தசமயம் பரவுதல். |
| 250 | சேரநாட்டுத் தமிழர் குடியேற்றம். |

n

| | |
|---|---|
| 250—கி. பி. 300 | கடைச்சங்க காலம். |
| 205—161 | கடல்கோளில் நாகதீபத்தின் பெரும்பாகம் மறைதல். |
| 175—கி. பி. 1070 | சோழபாண்டியர்களது படையெடுப்புக்களும் குடியேற்றமும், |
| கி. பி. | |
| 93 | லம்பகர்ணர் ஆட்சிப் பீடம் அமைத்தல். |
| 200 | வெடியரசன் நெடுந்தீவில் முக்கியர் ஆட்சிப்பீடத்தை அமைத்தல். |
| 303 | நாகர் வீழ்ச்சி. |
| 556 | லம்பகர்னர் வீழ்ச்சி. |
| 652—772 | சிங்களவர் ஆட்சி |
| 772 | சிங்களவர் வீழ்ச்சி. |
| 772—794 | பாணர், மறவர் என்போர் ஆட்சிப்பீடங்களை அமைத்தல். |

## தமிழரசு (795 — 1620)

| | |
|---|---|
| 795 | சிங்கையாரின் யாழ்ப்பாண அரசனை முடிசூடப்படுதல். |
| 1500 | வையா பாடல் |
| 1615 | கைலாயமாலை |

## போத்துக்கேயர் காலம் (1621—1657)

| | |
|---|---|
| 1623 | தோம்பு எழுதப்படல். |

## ஒல்லாந்தர் காலம் (1658—1795)

| | |
|---|---|
| 1707 | தேசவழமைச் சட்டம். |
| 1736 | யாழ்ப்பாண வைபவமாலை |
| 1795 | ஒல்லாந்தர் ஆட்சி முடிபு. |

## 2. பூமிசாத்திரக் குறிப்புகள்

### 1. தமிழ்நாடு

தமிழ்நாடு இந்தியாவின் தென்கிழக்கிலுள்ள ஒரு மாகாணமாகும். அது யாழ்ப்பாணத்திலிருந்து முப்பத்தாறு மைல் தூரத்திலுள்ளது. அவை இரண்டையும் பாக்குநீரிணைக்கடல் பிரிக்கிறது.

தமிழ்நாடு வடக்கே கன்னட நாட்டையும், தெலுங்கு நாட்டையும் கிழக்கே வங்கவிரிகுடாக் கடலையும், தெற்கே இந்துசமுத்திரத்தையும், மேற்கே மேற்குக் காற்றுடி மலைத்தொடரையும் எல்லைகளாக உள்ளது.

அது 50117 சதுரமைல் பரப்புடையது. அதன் குடிசனத்தொகை 48077456 (1981) ஆகும். அதன் தலைநகர் சென்னை பட்டினம். அதன் குடிசனத் தொகை 3266084 (1981) ஆகும்.

தமிழ் நாட்டின் ஆறு பெரும் பிரிவுகள் வருமாறு:

#### (a) தொண்டை நாடு

இது வடக்கில் வேங்கடம் தொடங்கி, தெற்கில் தென்பெண்ணை வரையுமுள்ள நாடாகும். இதில் நெல்லூர் மாவட்டத்தின் தென்பகுதி, சித்தூர், வட ஆற்காடு, தென் ஆற்காட்டின் வடபகுதி முதலியன அடங்கும்.

#### (b) சோழநாடு

இது சிதம்பரத்துக்கு வடபாலுள்ள வெள்ளாறுக்கும், தஞ்சையின் தென்பாலுள்ள வெள்ளாறுக்கும் இடைப்பட்ட நாடாகும்;

(*c*) **பாண்டிநாடு**

இது மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் என்னும் மூன்று மாவட்டங்கள் அடங்கிய நாடாகும்.

(*d*) **சேரநாடு**

இது மலையாளம், கொச்சி, திருவிதாங்கூர் என்னும் மூன்று மாவட்டங்களை அடக்கிய நாடாகும். கி. பி. 12ம் நூற்றுண்டில் மலையாளம் என்னும் புதிய மொழி உண்டான பின்னர் சேரநாடு ஒரு தனி நாடாயிற்று.

(*e*) **நாஞ்சில் நாடு**

கன்னியா குமரியைச் சார்ந்த இடங்கள் நாஞ்சில் நாடெனப்படும்.—

(*f*) **கொங்கு நாடு**

இது சேலம், பெரியார் மாவட்டம், தர்மபுரி, நீலகிரி, கோயம்புத்தூர் முதலின அடங்கிய நாடு.

## 2. ஆந்திரப் பிரதேசம் (தெலுங்கு நாடு)

இது தமிழ்நாட்டின் வட எல்லையில் கடற்கரை ஓரமாக உள்ளது.


## 3. கருநாடகம் (கன்னட நாடு)

இது தமிழ்நாட்டின் வடமேற்கில் உள்ள நாடு.

## 4 துளுவநாடு

இது கன்னட தேசத்தின் தென்பாகத்திலுள்ள சிறிய நாடு.

# தென்னிந்தியா



ஆந்திரப் பிரதேசம்
திருத்தணி
காஞ்சி
சென்னை
மராத்தி
பெங்களூர்
கோவா
கன்னட நாடு
தொண்டை நாடு
துளு நாடு
மைசூர்
சிதம்பரம்
கொங்கு நாடு
சேலம்
கும்பகோணம்
நீலகிரி
கோயம்புத்தூர்
கொல்லிமலை
சோழ நாடு
திருச்சிராப்பள்ளி
பாலக்காடு
தமிழ் நாடு
தஞ்சாவூர்
வேதாரண்யம்
கோடைக்கானல்
புதுக்கோட்டை
கோடிக்கரை
திண்டுக்கல்
பாக்கு நீரிணை
யாழ்ப்பாணம்
சேர நாடு
(மலையாளம்)
அரபிக் கடல்
கொச்சி
மதுரை
திருப்பரங்குன்றம்
இராமநாதபுரம்
இராமேஸ்வரம்
மண்டபம்
பாண்டிய நாடு
மன்னார்
விருதுநகர்
கொல்லம்
மன்னார்க் குடாக்கடல்
இலங்கை
காயல்பட்டினம்
கொழும்பு
திருநெல்வேலி
தென்காசி
திருவனந்தபுரம்
திருச்செந்தூர்
கன்னியாகுமரி
காலி
இந்து சமுத்திரம்



தமிழரசரின் நாணயங்கள்

**5. கலிங்கம்**

இது ஒறிசாவின் பிற்பக்கம், இராச மகேந்திரம், விசாக பட்டினம், கஞ்சாம் என்னும் பகுதிகளைக் கொண்ட நாடு.

**6. ஒரியா**

இது ஆந்திரப் பிரதேசத்துக்கும் மேற்கு வங்காளத்துக்கும் இடையிலுள்ள நாடு.

## 3. சாதிகளின் பட்டப்பெயர்

| | |
|---|---|
| அகம்படியான் | சேர்வைக்காரன் |
| அம்பலக்காரன் | மழவராயன், மழவன் |
| இடையன் | கோன் |
| கைக்கோளன் | முதலி |
| சாணன் | நாடான் |
| செம்படவன் | அம்பலவன் |
| சேணியன் | செட்டி |
| நத்தம்பாடி | உடையார் |
| பறையன் | சாம்புவன் |
| பள்ளி | படையாச்சி |
| பிராமணன் | ஐயர், ஐயங்கார், |
| மறவன் | தேவன் |
| முக்குவன் | போடி |
| வணிகன் | செட்டி |
| வேளாளன் | பிள்ளை, முதலி |

## 4. பெயரகராதி


அக்கினிகுலம், 7
அகத்தியர், 7, 26, 32
அகம்படியார், 11
அகமுடை வேளாளர், 47
அசுரர், 7
அடங்காப்பற்று, 28
அடிமை, 23, 44
அத்துளு, 21
அந்திரன், 11
அப்பர், 1
அபிசீனியர், 15
அப்பரணி, 14
அம்பட்டர், 51
அம்பலக்காரர், 40, 46
அருட்பிரகாசம், J. W. 46
அருணசலம், சேர். பொ., -7

ஆரியச்சக்கரவர்த்தி, 24, 28
ஆந்திரநாடு, 21
ஆரியர், 4, 6, 16, 29

இடையன், 8
இந்தியா, 2, 3, 5, 6, 16
இந்திரன், 7
இமையம், 32
இயக்கர், 6, 12, 46
இரத்தின தீபம், 16, 17
இராகவஐயங்கார், 7, 10
இராகவன், 10, 49
இராசநாயகமுதலியார், 26, 27, 30, 43, 46
இராசமடைப்பள்ளி, 48
இராசாவளி, 2
இராமநாதன், சேர். பொ., 16
இராமன், 7, 32
இராமாயணம், 26
இராமேஸ்வரம், 9, 24
இராவணன், 7, 32
இருக்கு, 7
இலங்கை, 2, 7, 20, 32

ஈழவர், 52

உடுமலைப்பேட்டை, 8
உடையார், 39, 47
உலோபாமுத்திரை, 26
உலூட் கொக், 4
உறற்றேற்ரு, 3
உறையூர், 35

எமேசன் ரெனென்ற், 15
எல்லாளன், 28, 34
எலியற், சேர். உவால்றர், 16
எலியற் ஸ்கொற், 1

ஏரெழுபது, 42

ஒட்டன், 18
ஒல்லாந்தர், 37

ஓரியா, 11, 19

கங்காகுலம், 23
கட்டுவன், 12
கடலோட்டு, 14
கந்தர், 50
கந்தவாலா, 51
கந்தன், 7, 32
கம்பன், 18
கரையார், 38
கலிங்கம், 21, 24, 25, 50
கலித்தொகை, 2
கள்ளர், 6, 25, 40
களப்பிரர், 21
கன்னட தேசம், 25
கன்னடி, 21
கன்னியாகுமரி, 14, 17
கனகராயன், 40

காசிச்செட்டி, 29, 49
காஞ்சி, 19
காணிநூல், 42
காயல் பட்டினம், 9
கார்காத்த வேளாளர், 47
காரைக்கால், 19
காரைதீவு, 2

கியூரேஸ், 30
கிளாஸ் ஐசாக்ஸ், 15

கீரிமலை, 2

குசவன், 18
குடிமை, 44
குமரிக்கண்டம், 1
குமார மடைப்பள்ளி, 48
குறவன், 18
குறும்பர், 10

கூபராசேந்திரன், 14
கூழங்கைச் சக்கரவர்த்தி,
9, 27, 28, 39

கேரளோற்பத்தி, 9

கைலாய மாலை, 21, 25,
35, 47

கொங்குநாடு, 22, 40
கொங்கு மண்டல சதகம்,
42
கொல்லிமலை, 9

கோணிலிஸ்யோன் சிம்
மன்ஸ், 15
கோவளம், 12
கோவியர், 48, 50, 51

சங்ககாலம், 26
சங்கிலியன், 18, 51
சங்குமடைப்பள்ளி, 48,
சதாசிவஐயர், தி. 46
சந்திரசேகர மாப்பா
ணன், 40
சபாநாதன், குல. 46
சம்புகோவளம், 8
சம்புத்தீவு, 1
சமதுதி, 31

சயதுங்கவரராசன், 4
சவ்வாதுமலை, 9

சாத்தன், 20
சாதகம், 8
சாதிமாலை, 3
சாமம், 17
சாவகச்சேரி, 22
சாளுக்கியர், 18
சிலப்பதிகாரம், 2, 42
சிவரத்தினம், 16, 48
சிறுகுடிவேளாளர், 47

சீமா, 18, 19
சீரியா, 15

சுபதிட்டமுனிவர், 23, 26, 37

சூதசங்கிதை, 2

செகராசசேகரமாலை, 23
செகராசசேகரன், 23
செட்டி, 39, 40
செண்பகமழவன், 39
செண்பகமாப்பாணன், 40
செம்மான், 19

சேது, 24
சேதுபதி, 11
சேரதீபம், 11
சேரநாடு, 8, 48
சேரபாலன் சீமா, 11
சேரன், 11, 39
சேரன் கலட்டி, 11
சேரனெழு, 11

சைஸ்கிவித், 15

சோழங்கன், 19
சோழநாடு, 17
சோழர், 29, 30, 36

ஞானப்பிரகாசர், சுவாமி 27, 28, 29, 56

தசரதன், 27
தனக்காரக்குறிச்சி, 11
தனிநாயகமுதலி, 41
தஸ்யு, 32

திராவிடர், 7
திருக்கோணமலை, 30
திருக்கை விளக்கம், 42
திருச்சி, 8
திருமூலர், 6
திருவந்தாதி, 42

தீபவம்சம், 17
தீயன், 10

துளு, 21
துளுவம், 21

தூ, 21

தெலுங்கு, 50
தென்மருட்சி, 22
தென்னாட்டுத்திருக்கோயிற் கல்வெட்டுகள், 43

தென்னாடு, 1

தேசவழமைச்சட்டம், 16
தேவர், 39, 40, 47
தேவராசேந்திரன், 41
தேவாரம், 42

தொண்டைநாடு,
17, 25, 39
தொண்டைமான், 19
தொண்டைமானாறு, 13
தொமாஸ் வான்றி, 48

தோம்பு, 10, 37

நகுலமலை, 2
நகுலமுனி, 2
நடேசபிள்ளை, சு. 46
நத்தவாடி, 50
நம்பூதிரி, 9, 15
நரசிங்கதேவன், 39
நவரத்தினம் சி. எஸ்.,
6, 28
நழவர், 48, 52

நாகர், 11, 15, 22, 28
நாகதீபம், 4
நாகர்கோயில், 10
நாடார், 19
நாயர், 4
நாவற்குழி, 11, 19

நீலகண்டசாஸ்திரி, 4, 8
நீலகண்டன், 41

நீறுபூசும் வேளாளர், 47

நெடுங்குடி வேளாளர், 47
நெடுந்தீவு, 13

பச்சைமலை, 19
பசும்மை எழுபது, 42
பட்டன், 11
படையாட்சி, 29
பணிக்கன், 10
பபிலோனியர், 15
பரசுராமர், 9
பரநிருபசிங்கன், 48
பரராசசிங்கன், 48
பறையர், 52

பாகியன், 16
பாண்டிநாடு, 19, 46, 47
பாண்டியர், 9, 27, 28,
29, 30, 31
பாண்டிமழவன், 23, 39,
43, 46
பாணகை, 14
பாணன், 3, 4. 11, 22,
25, 37, 39, 40
பாணினி, 26
பாரதம், 26
பாலைக்காடு, 15

பிருங்கலாதன், 32
பிள்ளை, 47
பிள்ளை. K. K., 46, 47

புகார், 8

புத்தர், 7, 21, 32
புறநானூறு, 42

பூசாவளி, 8

பேராயிரமுடையார், 40

பொதியமலை, 26
பொள்ளாச்சி, 7

போத்துக்கேயர், 16, 36, 37, 51
போக் (Boake), 5
போல் பீறிஸ், 5

மகமதியர், 9
மகாவம்சம், 4, 7
மகோதரன், 4
மடைப்பள்ளி, 38, 46 48, 50
மடப்பம், 35, 49
மடப்பளி, 38, 48, 49, 50
மண்ணுடுகொண்ட முதலி, 81
மணற்றி, 3
மணற்றிடல், 3
மணிபல்லவம், 3
மணிமேகலை, 3
மதுரை, 31
மயில்வாகனப் புலவர், 36, 46
மரிக்ஞெலி, 3
மலபார், 14
மலையாளம், 8, 9, 52
மழவர், 25, 37, 39, 40, 46, 47
மறவர், 6, 9, 22, 25, 40

மாந்தை, 8, 9
மாபாளசூழாமணி, 42
மாருதப்புரவல்லி, 31

மீகாமன், 16

முக்குவர், 10, 3
முசம்தார் பி. சி., 4
முத்துத்தம்பிப்பிள்ளை, 26, 46
முத்துராசர், 35, 36
முதலி, 38, 39, 41
முருகர், 50

மெகஸ்தனிஸ், 42, 44

மேழி எழுபது, 42
மேழி விளக்கம், 42

யாவகர், 22
யாழ்ப்பாடி, 27, 28, 31
யாழ்ப்பாணம், 2, 7, 8, 9, 22, 27, 42
யாழ்ப்பாண வைபவ மாலை, 25, 27, 36, 59, 45, 47, 51
யானையிறவு, 34

ரங்காச்சாரி, 4, 10, 14, 49

ஸிட்பிறேஸ், 11
ஸிவரு, 24

ஹூயிஸ், 5

லெமூரியா, 4

வடஇந்தியா, 6
வடமருட்சி, 22
வடுகு, 21
வண்ணூர், 51
வல்லிபுரம், 8
வலையிறவு, 14
வன்னி, 2
வன்னியர், 29, 30, 31, 32

வாரியார், 11
வால்மீகி, 26

விக்கிரமாதித்தன், 19
விசயநகரம், 46
விசயன், 5, 6, 7, 17
விபீடணன், 32

வெடியரசன், 14

வேங்கடம், 21
வேடுவன், 11, 16
வேதம், 26
வேலுப்பிள்ளை, க. 46
வேளாளர், 3, 7, 38, 39, 40, 48, 49, 50
வேளாளர் புராணம், 42

வையாபாடல், 27, 28 29, 32, 47
வையாபுரி ஐயர், 25

ருப்சன், 7

றெசில்டார், 17

## 5. பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 16 | ஆ. கனகசபை | V. கனகசபை |
| 5 | 14 | லம்பகர்னர் | லம்பகர்ணர் |
| 6 | 13 | கர்னர் | கர்ணர் |
| 7 | 23 | E. T. Rapson | E. J. Rapson |
| 11 | 28 | A. Kanagsabai | V. Kanagasabai |
| 8 | 30 | Vokhahama | Vokhahassa |
| 11 | 19 | நவுண்டில் | நவிண்டில் |
| 15 | 1 | கில அரசு | அரசு |
| 21 | 11 | சாமண்டி | சாமுண்டி |
| 22 | 16 | முடிவடைந்தது | முடிவடைந்தன |
| 22 | 21 | வடமருச்சி | வடமருட்சி |
| 26 | 13 | கி. மு. 1500 | கி. மு. 2000— கி. மு. 1500 |
| 12 | 30 | குடியேறினர் என் | குடியேறினர் |
| 33 | 28 | No | Number |
| 38 | 30 | vellatas | vellalas |
| 11 | 32 | பட | மட |
| 40 | 22 | Indio | India |
| 40 | 29 | மின் | மீன் |
| 48 | 24 | மடைப்பள்ளி [பார் | மடைப்பள்ளியார் |
| 49 | 2 | சிவ | சிவரத் |
| 55 | 6 | நீரினை | நீரிணை |